விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 10 ஞாயிற்றுக்கிழமை (26.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

## பெண்கள், கிராமசேவகர், மீனவர்கள் மீது மன்னாரில் கடற்படை கொடூர தாக்குதல்

### துப்பாக்கியை தலையில் வைத்து அச்சுறுத்தல்

(மன்னார்) பெண்கள், கிராமசேவகர், மீனவர்கள் மீது மன்னாரில் கடற்படையினர் கொடூரத் தாக்குதல் மேற்கொண்டுள்ளதோடு துப்பாக்கியைத் தலையில் வைத்து அச்சுறுத்தியுள்ளனர். 19

## நாட்டில் மேலும் 79 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கோவிட் தொற்றி 19

## திலீபனின் நினைவு தினம் இன்று



19

# பயங்கரவாதச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்




### நாட்டுக்குவரும் ஐரோப்பிய குழுவிடம் வலியுறுத்துவோம்
### அநுராதபுர சிறை சென்ற சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)
நாட்டுக்கு வரும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு செவ்வாய்க் கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கின்றபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை முற்றுமுழுதாக நீக்க வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துவோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனாவால்
## வவுனியாவில் 6 பேர் மரணம்

(வவுனியா)
வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக மேலும் 06 மரணங்கள் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ள 19

திடீர் சுகவீனம்
## மிருசுவிலில் 7 மாத குழந்தையின் தாய் மரணம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் மூன்று பிள்ளைகளின் இளம் தாய் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.
திடீர் சுகவீனம் காரணமாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு 19

## வட மாகாணத்தின் புதிய ஆளுநராக சுந்தரம் அருமைநாயகம்?

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அடுத்த வாரம் பதவி விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 19

அநுராதபுரம் சிறைச்சாலையில்
## அரசியல் கைதிகளை சந்தித்த சுமந்திரன்

(அநுராதபுரம்)
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உட்பட்ட குழுவினர் 19

## வடக்கில் கடந்த 24 நாட்களில் 310 பேர் கோவிட் தொற்றால் பலி

### 8 ஆயிரத்து 401 தொற்றாளர்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)
வடக்கில் கடந்த 24 நாட்களில் 310 பேர் கொரோனோ வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.
சுகாதாரத் துறை 19

திலீபனை நினைவுகூர
## உயிரிழந்த மாகாண சபை உறுப்பினருக்கும் தடை

### உத்தரவுடன் சென்ற பொலிஸ்

(முல்லைத்தீவு)
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் ஊடாக 19

## விலைகள் அதிகரித்தால் மக்கள் பாதிக்கப்படுவர்

### நுகர்வோரைப் பாதுகாக்கும் அமைப்பு

(கொழும்பு)
அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்தால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.
கோதுமை மா மற்றும் இறக்குமதி செய்யப்படும் பால்மா ஆகிய அத்தியாவசிய உணவு பொருட்களின் விலையை மீண்டும் மீண்டும் 19


கிளிநொச்சியில் அமைந்துள்ள
## சிறீதரனின் அலுவலகம் பொலிஸாரால் முற்றுகை

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் அமைந்துள்ள சிறீதரன் எம்.பியின் அலுவலகம் நேற்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டிருந்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கிளிநொச்சி 19

## கொரோனா +1,146

(கொழும்பு)
நாட்டில் நேற்று சனிக்கிழமை 1,146 கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.
அதற்கமைய இது 19

# வாழ்த்துக்கள்



அகவை அறுபது காணும்
ஆன்மீகச்சுடர்

## ரிஷி தொண்டுநாதன்

சுவாமிகளை
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
சோ. ஸ்ரீதரன், ஸ்ரீ. குககாந்தன்
சிவபூமி ஞான ஆச்சிரமம்
கும்பிளாவி

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு. கந்தையா ஸ்ரீநந்தகோபன் அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி தங்கம்மா கந்தையா

( தங்கேஸ்வரி – இளைப்பாறிய ஆசிரியை
இணுவில் அ.மி.த.க. பாடசாலை )

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
யா/நவாலி தெற்கு அ.மி.த.க பாடசாலைச் சமூகத்தினர்
(8013)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
24 . 02 . 1986

விண்ணில்
26 . 09 . 2017

## அமரர் சிவகுமாரன் காண்டீபன்

ஆண்டுகள் நான்கு நகர்ந்தாலும் ஆறாது எமது துயர்
அகலாது பிரிவின் சோகம் நீங்காது உன் நினைவுகள்
நிலைத்திருக்கும் எம் உள்ளத்தில்
உன் பிரிவால் தவித்து இருக்கும் நாங்கள்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

ஒருதானை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-3655)

2020 சாதாரண தரப் பரீட்சையில்

# யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 154 மாணவர்கள் 9ஏ சித்தி

(யாழ்ப்பாணம்)

2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 154 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதிசிறப்பு சித்தியை (ஏ) பெற்றுள்ளனர்.

அத்துடன், அழகியல் பாடங்களின் பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் 63 மாணவர்கள் 8 பாடங்களில் அதிசிறப்பு சித்தியை (ஏ) பெற்றுள்ளனர்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தெரிவித்ததாவது,

2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 137 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 2 ஆயிரத்து 146 மாணவர்கள் கணிதம், தமிழ் பாடங்களில் சாதாரண சித்தியுடன் 3 சி 3 எஸ் பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்தில் கல்வியைத் தொடரத் தகுதிபெற்றுள்ளனர். இது 68.41 சதவீதமாகும்.

அத்துடன், பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட அழகியல் பாடங்களுக்குத் தோற்றாத 154 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதிசிறப்பு சித்தியை (ஏ) பெற்றுள்ளனர்.

அழகியல் பாட பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட 63 மாணவர்கள் 8 பாடங்களில் அதிசிறப்பு சித்தியைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் 2015ஆம் ஆண்டு 59 மாணவர்களும் 2016ஆம் ஆண்டு 119 மாணவர்களும் 2017ஆம் 125 மாணவர்களும் 2018ஆம் ஆண்டு 110 மாணவர்களும் 2019ஆம் ஆண்டு 115 மாணவர்களும் 9 ஏ சித்தியைப் பெற்ற நிலையில் இம்முறை 154 மாணவர்கள் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலேயே அதிகூடிய (68.41) சதவீத மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் கல்வியைப் பயில்வதற்கு தகுதி பெற்றுள்ளனர் என்றுள்ளார். (ம-03)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்
திரு. ரா. ராஜ்குமார் அவர்களின் அன்புத் தந்தை

## திரு. ராஜேந்திரம்

மற்றும்

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை
திருமதி. மு. மோகனலட்சுமி அவர்களின் அன்புக் கணவர்

## திரு. முருகானந்தன்

மற்றும்

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை
திருமதி. ம. கல்யாணி அவர்களின் அன்பு மாமனார்

## திரு. நடராஜா

ஆகியோரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னார்களது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் குழாம்
யா / சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய சமூகம்

# மரண அறிவித்தல்

## விஜிதா விஜயகுமார்
## ( மெரினா )



பிறப்பு : 1981.06.19
இறப்பு : 2021.09.25

தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜிதா விஜயகுமார் நேற்று (25.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லத்துரை - தயாநிதி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயகுமாரின் பாசமிகு மனைவியும் ஜினோஜன், ஜிந்துஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விஜயகுமாரின் (விஜயன்) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
88888

பத்திரகாளி கோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
077 601 1151
021 205 2791
தகவல்:- குடும்பத்தினர்
[விஜய் DJ உரிமையாளர்]

# மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்

## கண்டன அறிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

**(யாழ்ப்பாணம்)**

**கொரோனாக் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்" எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இறந்தவர்கள் எந்த அளவுக்கு அதிகாரங்களின் மனச்சாட்சியைத் தொந்தரவு செய்கிறார்கள் என்பதையே தற்போதைய பொலிஸாரின் செயல் காட்டுகிறது.

"பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை, பொலிஸார் இழுத்துச் சென்று பொலிஸ் வாகனத்தில் அழைத்துச் செல்லும் காணொளிக் காட்சியை நானும் பார்த்தேன்.

இறந்தவர்களை நினைவு கூரும் விழாவில் அவர் பங்கேற்றதாக கூறப்படுகிறது. அதாவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு பொதுவான குற்றவாளியைப் போல பொலிஸாரினால் இழுத்துச் செல்லப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

மேலும், எனக்குத் தெரிந்த வரை நாம் இறந்தவர்களை நினைவில் கொள்ள முடியாது என்று எந்த சட்டமும் இல்லை.

இதேவேளை பொலிஸாரின் இந்தச் செயல், இறந்தவர்கள் எந்த அளவுக்கு அதிகாரங்களின் மனச்சாட்சியைத் தொந்தரவு செய்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

இறந்த ஆவிகளால் தொந்தரவு இல்லாமல் அமைதியாக தூங்குவது அவர்களுக்கு கடினமாக இருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக திலீபன் அமைதியான சத்தியாக்கிரியாக இருந்தார். அவர் உன்னத காரணங்களுக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். உன்னத காரணங்களுக்காக இறந்த ஒரு அமைதியான எதிர்ப்பாளரை மக்கள் நினைவு கூருவது பற்றி அரசாங்கம் ஏன் கலங்குகிறது?

மேலும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்கள், மக்களுக்குப் பயத்தை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் நினைத்தால் அவர்களே ஏமாற்றப்படுவார்கள்.

அதாவது இவ்வாறான செயற்பாடுகள் இந்த நாட்டில் அரசியல் சுயநிர்ணயத்திற்காக போராடுவதற்கு மக்களை மேலும் உறுதியளிக்கும்.

இதேவேளை இறந்த வீரர்களை நினைவுகூருவதற்கு மக்களுக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கும் முன் நீதிமன்றங்கள் மிகவும் கவனத்துடன் இருக்கும் என்று நம்புகிறேன்.

கொரோனாக் கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்" என சி.வி. விக்னேஸ்வரன் தனது கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதை பங்காளிக் கட்சிகள் தவிர்க்க வேண்டும்

## சாகர காரியவசம் எச்சரிக்கை

(கொழும்பு)

கெரவலப்பிடிய மின் நிலையத்தின் 40 சதவீத பங்குகள் அமெரிக்க நிறுவனத்திற்கு விற்கப்படவில்லை.

மாறாக 15 வருட கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. கட்சியையும், அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவதை பங்காளிக்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

கெரவலப்பிட்டிய மின் நிலையம் தொடர்பில் எதிர்க் கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிக் கட்சியினரும் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் பங்குகள் அமைச்சரவை அங்கீகாரமில்லாமல் அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கும் 15 வருட கால ஒப்பந்த யோசனையை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவையில் தெளிவு படுத்தினார். அமைச்சரவை யோசனையை அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள் எவரும் எதிர்க்கவில்லை. அனைவரும் இணக்கம் தெரிவித்தார்கள். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் பங்காளிக் கட்சியின் உறுப்பினர் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்விடயம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், பங்காளி கட்சி தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தெளிவுபடுத்தப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் இவ்விடயம் குறித்து பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும். அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார். (நி-4)

# வரையறைகளுடன் நாட்டை திறக்க எதிர்பார்ப்பு-கெஹலிய

(கொழும்பு)

ஒக்டோபர் முதலாம் திகதி நாடு திறக்கப்படும் என நம்புவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அமுலில் உள்ள முடக்க கட்டுப்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளன.

இந்நிலையில் சுகாதார வழிகாட்டுதல்களால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நாடு திறக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும் எதிர்வரும் வியாழக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரத்தில் நாடு மீள திறக்கப்பட்டாலும் அது குறித்த பின்பற்ற வேண்டிய பரிந்துரைகள் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்படவுள்ளதாக நேற்று முன்தினம் இராணுவத் தளபதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலத்தை 6 மாதங்களுக்கு நீடிக்க யோசனை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

நாட்டில் தற்போது இயங்கும் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நிறைவுக்கு வருகின்றது. எனினும், தற்போதைய சூழ் நிலையில் தேர்தலொன்றை நடத்துவது நிதி உட்பட ஏனைய விடயங்களில் தாக்கம் செலுத்தும் என்பதாலேயே சபையின் ஆயுட்காலத்தை நீடிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆராய்ந்து வரு கின்றது.

நாட்டில் கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் கலப்பு முறையிலேயே நடைபெற்றது. சபைகளுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உட்பட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இலவச பி.சி.ஆர். பரிசோதனை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பிசிஆர்.சோதனைகள் நடத்துவதற்கான செலவுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஏற்றுள்ளது.

அதன்படி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பி.சி.ஆர். நிலையங்களில் அவர்கள் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இந்தச் சலுகையினை தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பி.சி. ஆர்.சோதனை நிலையங்கள் நேற்று முதல் செயற்பாட்டில் உள்ளன.

பொதுவாக ஒரு பிசி.ஆர். சோதனைக்கு 40 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படும். சோதனை முடிவுகள் சுமார் 2 - 3 மணித்தியாலங்களுக்குள் வெளியாகும்.

இதன்போது எவருக்கேனும் தொற்று உறுதியானால், உரிய பொதுச் சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு, தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# கோலியின் போராட்டம் வீண்

# தொடர் வெற்றியில் சென்னை

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 6 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

2021 ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் சார்ஜாவில் நடைபெற்ற 35 ஆவது லீக் ஆட்டத்தில் விராட் கோலி தலைமையிலான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும், டோனிதலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணிமுதலில் துடுப்பெடுத்தாடுமாறு பெங்களூர் அணியை பணித்தது.

அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர், விராட் கோலிமற்றும் தேவ்தத் படிக்கலின் வலுவான ஆரம்பத்தினால் முதல் 13 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 103 ஓட்டங்களை குவித்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 180 ஐ கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 13.2 ஆவது ஓவரில் விராட் கோலியின் (53) ஆட்டமிழப்பும், அவரையடுத்து வந்த அதிரடி ஆட்டநாயகன் ஏ.பி.டி.வில்லியர்ஸ் (12), தேவ்தத் படிக்கல் (70) ஆகியோரின் ஆட்டமிழப்புக்கள் பெங்களூர் அணியின் தலை எழுத்தினை மாற்றியமைத்தது.

தொடர்ச்சியாக களமிறங்கிய வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்க முடியாது ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழந்து நடையை கட்ட இறுதியாக 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது பெங்களூர் அணி.

157 ஓட்டம் என்ற இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சென்னைக்கு ஆரம்ப வீரர்களின் வலுவானதும், அதிரடியானதும் இணைப்பாட்டம் கைகொடுத்தது.

அதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டு பிளஸ்ஸி மற்றும் ருதுராஜ் ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 71 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.


8.2 ஆவது ஓவரில் சஹாலின் பந்து வீச்சில் ருதுராஜ் 38 ஓட்டங்களுடன் விராட் கோலியிடம் பிடிகொடுக்க, 9.1 ஆவது ஓவரில் டூபிளஸ்ஸி 31 ஓட்டங்களுடன் மக்ஸ்வெல்லின் பந்து வீச்சில் சைனியிடம் பிடிகொடுத்தார்.

தொடர்ச்சியாக களமிறங்கிய மொய்ன் அலி 23 ஓட்டங்களுடனும், அம்பத்தி ராயுடு 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேற, சென்னை அணி 133 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது.

பின்னர் 5 ஆவது விக்கெட்டுக்காக சென்னையின் இரு பலம் தூண்களான சுரேஷ் ரெய்னா மற்றும் டோனி கைகோர்த்தாட 18.1 ஆவது ஓவரில் வெற்றியை பதிவு செய்தது சென்னை அணி.

ஆடுகளத்தில் ரெய்னா 17 ஓட்டங்களுடனும், டோனி 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் சென்னை அணி 7 வெற்றிகளுடன் மொத்தமாக 14 புள்ளிகளைப் பெற்று பட்டியலில் முதலிடத்தைப்பிடித்துக் கொண்டது. (4-6)



## இரண்டு அசுர வெற்றியுடன் புள்ளிப்பட்டியலில் 4ஆவது இடத்தில் கே.கே.ஆர்.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகளை துவம்சம் செய்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இரண்டு அசுர வெற்றியால் புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியது.

ஐ.பி.எல். இரண்டாவது பகுதி தொடரில் புத்துணர்ச்சியுடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளம் இறங்கியது.

மும்பை இந்தியன்ஸ்க்கு எதிராக பெரும்பாலும் தோல்வியைச் சந்திக்கும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் மும்பை இந்தியன்ஸை 156 ரன்னில் கட்டுப்படுத்தியதுடன் 15.1 ஓவரிலேயே இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த இரண்டு அசத்தலான வெற்றி மூலம் நிகர ரன் ரேட் (NRR) மைனஸில் இருந்து பிளஸ்-ஆக உயர்ந்ததுடன் 9 போட்டிகளில் நான்கு வெற்றி மூலம் 8 புள்ளிகள் பெற்று புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

4ஆவது இடத்தில் இருந்த மும்பை இந்தியன்ஸ் 9 போட்டிகளில் ஐந்தில் தோல்வியடைந்து 6 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது. (4-6)




## சர்வதேச வலைப்பந்தாட்ட தரவரிசை; இலங்கைக்கு 18 ஆவது இடம்

### ஆசிய மட்டத்தில் முதலிடம்



சர்வதேச வலைப்பந்தாட்ட சம்மேளனம் அண்மையில் வெளியிட்டுள்ள சர்வதேச தரவரிசையின்படி இலங்கை வலைப்பந்தாட்ட அணி 18 ஆவது இடத்தையும் ஆசிய மட்டத்தில் முதல் இடத்தையும் வகிக்கின்றது.

சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைவாக அவுஸ்திரேலியா 199 புள்ளிகளுடன் முதனிடத்தில் உள்ளது.

187 புள்ளிகளுடன் உள்ள நியூசிலாந்து இரண்டாவது இடத்தை வகிப்பதுடன், 175 புள்ளிகள் பெற்றுள்ள இங்கிலாந்து மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது.

59 புள்ளிகளை எடுத்து முதனிடத்தை கொண்டுள்ள இலங்கை ஆசிய மட்டத்தில் முதனிடத்தை வகிக்கிறது.

சர்வதேச வலைப்பந்தாட்ட தரவரிசையின்படி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, ஜமைக்கா, தென் ஆபிரிக்கா, மலாவி, உகண்டா, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், ட்ரினிடாட் அண்ட் டொபேக்கோ, வட அயர்லாந்து, சிம்பாவே, பார்படோஸ், குக் தீவுகள், ஸெம்பியா, சமாவோ, பிஜி, இலங்கை, டொங்கா, சென். லூசியா ஆகிய நாடுகள் முதல் 20 நாடுகள் வரிசையில் உள்ளன.

இதில் இலங்கை மாத்திரமே முதல் 20 இடங்களுக்குள் இருக்கும் ஒரேயொரு ஆசிய நாடாகவுள்ளமை சிறப்பம்சமாகும். (4-6)

## ரோஹித் சர்மா 1000 ரன்

ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தாவுக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் கப்டன் ரோகித் சர்மா 1000 ரன்கள் எடுத்து சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் அண்மையில் நடந்த ஆட்டத்தில் கொல்கத்தாவுக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் கப்டன் ரோகித் சர்மா 33 ரன்கள் எடுத்தார்.

இதன்மூலம் கொல்கத்தா அணிக்கு எதிராக மட்டும் அவர் 1000 ரன்களைத் தொட்டார்.

ஒரு குறிப்பிட்ட ஐ.பி.எல் அணிக்கு எதிராக எந்த ஒரு வீரரும் 1000 ரன்னை எடுத்தது இல்லை. இதன் மூலம் ரோகித் சர்மா புதிய சாதனையை படைத்தார். (4-6)

# இராசிபலன்

**26.09.2021**
**புரட்டாதி 10, ஞாயிற்றுக்கிழமை**
**பஞ்சமி பிற்பகல் 12.26 மணிவரை**
**கார்த்திகை பிற்பகல் 2.46 மணிவரை**
**சுபநேரம் -9.02- 10.32 மணிவரை**
**இராகு காலம் -4.32- 6.02 மணிவரை**
**சந்திராஷ்டமம்- சித்திரை, சுவாதி**

**வளவன்**


**மேஷம்**

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


**ரிஷபம்**

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள்வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.


**மிதுனம்**

எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


**கடகம்**

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் கூடும்.


**சிம்மம்**

கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.


**கன்னி**

மறைமுக எதிர்ப்புகள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.


**துலாம்**

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காணும் நாள்.


**விருச்சிகம்**

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுக முண்டு.


**தனுசு**

கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


**மகரம்**

எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


**கும்பம்**

வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


**மீனம்**

முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், நண்பர்களின் வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

பனித்துளியைச் சுமப்பதால் மலரின் அழகு குறைந்துவிடுவதில்லை.

# 50 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசி

## பேராசிரியர் நீலிகா

**(கொழும்பு)**

**எதிர்வரும் காலத்தில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் தடுப்பூசியின் மூன்றாம் டோஸான பூஸ்டர் தடுப்பூசியை செலுத்த வேண்டி ஏற்படும்என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.**



சினோபார்ம் தடுப்புசி செலுத்திக் கொண்ட இளம் வயதினருக்கு பூஸ்டர் தடுப்புசிதேவைபடாது.

அதனடிப்படையில் 50 வயதிற்கு குறைந்தவர்களுக்கு மூன்றாவது தடுப்புசி செலுத்த வேண்டியது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# தமிழின அழிப்பிற்கு நீதி கோரும் இத்தாலி வாழ் தமிழ் மக்களுடன்

## பலெர்மோ மாநகராட்சியும் இணைவு

(இத்தாலி)

இத்தாலியின் முக்கியமான நகராட்சிகளில் ஒன்றான பலெர்மோ மாநகராட்சியும், இத்தாலி தமிழர் ஒன்றியமும் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளன.இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ச இந்தமாத நடுப்பகுதியில் இத்தாலியப் பயணத்தை மேற்கொண்ட நிலையில் இத்தாலி வாழ் தமிழ் மக்களின் தரப்பில் எடுக்கப்பட்ட முக்கியமான நகர்வாக இந்த உடன்படிக்கை நோக்கப்படுகிறது.

இலங்கையில் நடந்த தமிழின அழிப்பை இனப்படுகொலையாக ஏற்றுக் கொண்டு எதிர்கால அரசியல் நகர்வுகளுக்கு அங்கீகாரம் வழங்கும் ஒரு உடன்படிக்கையாக இது உருவாகியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரை சிங்கள மக்கள் அதிகம் வாழும் இத்தாலியில் அதன் முக்கியமான நகராட்சிகளில் ஒன்றாக உள்ள பலெர்மோ மாநகராட்சியுடன் தமிழ் அமைப்புகள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்துள்ளன.

இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் தமிழின அழிப்பிற்கு நீதி கோரும் இத்தாலி வாழ் தமிழ் மக்களுடன் பலெர்மோ மாநகராட்சியும் இணைந்துள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் பலெர்மோ மாநகராட்சி இத்தாலி தமிழர் ஒன்றியத்துடன் சில விடயங்களை முன்னெடுக்கும் வகையில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடாத்தி வரும் படுகொலைகளை இனப்படுகொலைக்கள் உறுதிப்படுத்துவது. பலெர்மோவில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 11 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் ஒன்றை பிரகடனப்படுத்துவது.

பலெர்மோ நகரத்திற்கும் தமிழ்சமூகத்திற்கும் இடையே இறுக்கமான தொடர்புகளை பேணுவது ஈழத்தமிழர் வரலாறு, கலாசாரம் மற்றும் அடையாளத்தை பலெர்மோ குடிமக்கள் அறிவதற்காக முயற்சிகளை ஊக்குவிப்பது உட்பட முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பிரதமர்மகிந்த ராஜ பக்ச குழுவின் இத்தாலியப்பயணம் முடிவடைந்த ஒரு வார காலத்தில் பலெர்மோ மாநகராட்சியில் இருந்து வெளிப்பட்ட இந்த நகர்வு புலம்பெயர் ஈழத்தமிழர்களின் தளத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-4)


# கண்ணீர் அஞ்சலி



எமது உடன்
பிறவா சகோதரர்

**திரு.கந்தசாமி சாந்தகுமாரன்**

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி2695)

**ரூபி ஜுவல்லறி - உரிமையாளர்கள்**
**இல. 227 - 229 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

# க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் 2020 (2021)

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

எல்.அபிஸ்கலைன் -9 ஏ, ஆர்.டினேஸன் -9ஏ, ஜே. டபுள்யு. ஜக்சன்-9ஏ, விஜீவிதன்-8ஏ, கே.கபில்ராஜ்- 8ஏ, எம்.ஸ்ராலன்றாஜ்-8ஏ, ஏ.பி. ஜொனாதன்- 8ஏ பி, ஏ.ஆர். றேனுசன்-8ஏ சி, எ.வி. அபிலாஸ்-7ஏ 2பி ,பி. வனிலோ- 7ஏ பி சி, என்.அட்சஜன்- 6ஏ 2பி , ஜே.கஷ்ரன்-6ஏ 2பி, எஸ்.டெல்வின்-6ஏ 2பி, ஜெ. யதுசன்-6ஏ 3பி,எம்.எம்.அன்ரன்குறூஸ்வோன்- 6ஏ 2பி சி, எஸ்.சுமிந்தன்- 6ஏ பி 2சி, ஜே.ஜே. டினோசன்- 5ஏ 3பி , ஜே.ரி. நிறோஜன்- 5ஏ 2பி சி, ஜே.ஜே.டில்சன் -5ஏ 2பி 1சி,ஜெ.ஜெ.ஜெனட் ஜெகிசன்-5ஏ 2பி 2சி, எஸ்.டனிஸ்ரன்-5ஏ 3பி எஸ்.

**மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

சி.கபிசன் -9ஏ , சி.சிவானுஜன்- 9ஏ, சிஜனுசிகன்-8ஏ, செ.டிலக்சிகா-8ஏ, சி.கேசி-8ஏ,ப.மதுராங்கா-8ஏ , சிகாயத்திரி-8ஏ ,உ.கிபிசா- 8ஏ, கு. துஷானா 8ஏ பி, சி.அருண்சாந்-7ஏ பி, ஆ.லக்சியா-7ஏ பி சி, ச. சுருபினி-7ஏ 2பி, க. ரிஸக்சன்-6ஏ பி சி சுருபன்-6ஏ 2பி, இ. சோபிகன்- 6ஏ 2பி சி, வி. துசன்ஜா- 6ஏ 2பி எஸ், கு.விஜுசன் -5ஏ 2பி எஸ், ச.கம்சிகா-5ஏ 2பி சி, இ. தனுஸ்கரன் -5ஏ பி எஸ், வி.பெனிற்றா- 5ஏ பி 3சி

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

கி.புனிதா-7ஏ 2பி, க.கலையமுதன் -6ஏ பி சி, ரு.தமிழினி- 6ஏ 2சி எஸ்.

**வட்டு மத்திய கல்லூரி**

கே.மாதங்கி- 8ஏ, எம்.கம்ஷனா- 6ஏ 2பி , ரிடிலக்ஷனா- 6ஏ பிசி,எம்.கீதாஞ்சலி-5ஏ 2பிசி, வை. சுகந்தி- 5ஏ 3சி

## பொலிஸார் மூலம் வேண்டாம்

# பொதுச்சுகாதார பரிசோதகர் மூலம் பொதுமக்கள் விடயத்தை கையாளுங்கள்

### சாவ. நகர சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு சாவகச்சேரி நகரசபை இடமளிக்கக் கூடாது என சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சு.நிதிகேசன் தெரிவித்துள்ளார். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு வேளையில் ஒரு சிலர் அவசர பொருள் தேவைக்காக கூடிய வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சில வர்த்தக நிலைய உரிமையாளர்களை கட்டாயப்படுத்தி பொலிஸ் நிலையம் ஏற்றிச் செல்கின்றனர். பொது மக்கள் பலரும் இவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படுகின்றனர்.எனவே பொலிஸாரால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக பொதுச்சுகாதாரப் பரிசோதகரை வைத்து பொது மக்கள் விடயத்தை கையாள முயற்சிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-7-30)

# யாழ்.பல்கலையில் சர்வதேச இணையவழி கருத்தரங்கம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறையும், நன்னிலை மையமும் இணைந்து நடத்தும் "இளையோர் உண்மைகள் மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கை" எனும் கருப்பொருளிலான உரையரங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 07 மணியளவில் இணைய வழியூடாகச் சர்வதேச ரீதியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.சிவகரன் ஒருங்கிணைப்பிலும், தலைமையிலும் இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்த உரையரங்கில் Meeting ID: 63106299 899, Passcode: Youth @2021 எனும் அடையாளத் தரவை அளிப்பதனூடாக உள்நுழைந்து பங்கேற்கலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-7-18)

## மின்னல் தாக்கி உயிரிழந்தவருக்கு கொரோனா

(குப்பிழான்)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இடிமின்னல் தாக்கி 38 வயதான மீனவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

அவரது சடலத்திற்குப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (4-7-18)

# ஊரடங்கில் வர்த்தக நிலையங்களில் வாடகை அறவிடுவதை தவிருங்கள்

### நெல்லியடி வர்த்தகர்கள் கோரிக்கை

(கரணவாய்)

ஊரடங்கு காலத்தில் வர்த்தக நிலையங்களுக்கான வாடகைகள் அறவிடுவதை தவிர்க்குமாறு நெல்லியடி வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட நெல்லியடி பொதுச் சந்தை வர்த்தக நிலைய உரிமையாளர்களே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இவ்வாண்டு ஊரடங்கு மற்றும் கொரோனாப் பரவல் காரணமாக பல மாதங்கள் பொதுச் சந்தை மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வியாபார நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளதுடன், வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட காசோலைகள் பலவும் திரும்பியுள்ளது.

இவ்வாறு பொருளாதார ரீதியாக தாம் பாதிக்கப்பட்ட போதிலும் கரவெட்டி பிரதேச சபை எமது கஷ்டங்களை கருத்திற் கொள்ளாது வாடகைப் பணத்தை வசூலிப்பது பெரும் வேதனையளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த முறை பயணத்தடை காலத்தில் வடமராட்சியில் உள்ள ஏனைய பிரதேச சபைகளால் வாடகைகள் அறவிடப்படாத போதிலும் கரவெட்டி பிரதேச சபையால் நெல்லியடி வர்த்தக நிலையங்களில் வாடகை அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே இம்முறையாவது தமக்குரிய வாடகையை வசூலிப்பதை தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-7-60)

# நெல் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



(சாவகச்சேரி)

நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் தொடர்பாக தென்மராட்சி-சரசாலை பகுதி விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் காலை விவசாயத் திணைக்களத்தினரால் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதி விவசாயப்பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கலந்து கொண்டார்.

இதன் போது சேதனப் பசளை பயன்படுத்தும் விதம், சேதனப் பசளை ஊடாக அதி உச்ச விளைச்சலைப் பெறும் விவசாய நுட்ப முறைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டப்பட்டது.சரசாலை விவசாயிகளுக்கு காலபோகத்திற்கான 406 வர்க்க விதை நெல் வழங்கும் நிகழ்வும் குறித்த தினத்தில் இடம்பெற்றது.(4-7-30)

# பயிற்சி நெறிகளும் கருத்தமர்வுகளும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு மாகாணத்திற்குட்பட்ட 19-40 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் சாத்தியப்பாட்டினை அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன் ZOOM மூலமான 100 பங்குபற்றுநர்களை மட்டும் உள்ளடக்கிய பிரபல வளவாளர்கள் கலந்து கொள்ளும் பயிற்சி நெறிகள் மற்றும் கருத்தமர்வுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை http: //edumin.np.gov.lk,FB Page: http:// WWW .facebook. com/ youthnorth,Form Link: https://forms.gle/oy rw1w PFEtxZzCLW6) ஆகியவற்றில் பெறமுடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2021 ஆகும்.மேலதிக விபரங்களுக்கு 077 704 53 34, 071 9785994 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது, (4-7)

# மரத்துடன் மோதியது வாகனம் மூவர் வைத்தியசாலையில்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,அராலி மத்தியில் வசிக்கும் ஒருவர் தனது குடும்பத்தினருடன் வாகனத்தில் செல்லும்போது வாகனமானது மரத்துடன் மோதி விபத்திற்குள்ளானது.

இதில் அறுவர் பயணித்த நிலையில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மற்றைய இருவர் சாதாரண காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்த மூவரும் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டனர். (4-7-104-18)

# சாவகச்சேரியில் விபத்து

### மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில்,ஏ9 வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றவீதிவிபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதில் கண்டி வீதி நுணாவில் பகுதியைச் சேர்ந்த 68 வயதான கெங்காதேவி என்ற பெண்ணே மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7-30)

# டெல்டா வைரஸின் உப பிறழ்வு நாட்டில் கண்டுபிடிப்பு

## மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது பரவும் டெல்டா வைரஸின் உப பிறழ்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.**

எதிர்காலத்தில் மேலும் பல உப பிறழ்வுகள் உருவாகக் கூடும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் வைரஸ் தொற்று தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நதீக ஜானக தெரிவித்தார்.

புதிய உப பிறழ்வு மற்றும் டெல்டா பிறழ்வின் செயற்பாடுகள் ஒரே விதமாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வைரஸ்தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுதல் இன்றியமையாத செயற்பாடென கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்புமருத்துவ ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்டதன் பின்னரும் கொரோனா வைரஸ்தொற்று ஏற்படக்கூடும். எனினும், தடுப்பூசி ஏற்றிக் கொண்டதன் பின்னர் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கப்படுவதால், கொரோனாத்தொற்றின் பாரதூர நிலை ஏற்படாது எனவும் பேராசிரியர் நீலிகா மலவிகே சுட்டிக்காட்டினார். (நி-4)

# இலங்கையில் 70 சதவீத வலுசக்தியை ஏற்படுத்த நடவடிக்கை

## சூரியசக்தி மற்றும் காற்றாலை முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்கு இணையாக நடத்தப்படும் எரிசக்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் கலந்து கொண்டார்.

நிலை பேண்தகு எரிசக்தி அபிவிருத்திக்கு இலங்கையில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 70 வீதமான வலுசக்தியை ஏற்படுத்தவும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் புதிதாக நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்குவதை இரத்துச் செய்தமையூடாக, கால நிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்னுற்பத்திகளை மேற்கொள்வதற்கான முதலீட்டாளர்களுக்கும் இதன்போது ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். (நி-4)

# இலங்கை-இந்தோனேஷியா வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு



(கொழும்பு)

இந்தோனேஷியா வெளிவிவகார அமைச்சருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கும் இடையில் நியூயோர்க்கில் உள்ள இந்தோனேஷிய தூதரகத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை குறித்து இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக இந்தியப் பெருங்கடலில் இடம்பெறும் குற்றங்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு மற்றும் தகவல் பரிமாற்றங்கள் குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுற்றுலாத்துறையை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (நி-4)

# கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 12,530 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 530 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 1,332 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 372 ஆக அமைந்துள்ளது. அவர்களில் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 692 பேர் குணமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இலங்கையில் தயாரிக்கப்படும் முச்சக்கரவண்டி அடுத்த ஆண்டு சந்தைப்படுத்தத் திட்டம்



(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்படும் முதல் மின்சார முச்சக்கர வண்டியான வேகா இலத்திரனியல் முச்சக்கர வண்டி அண்மையில் பன்னலையில் உள்ள சர்வதேச கார் ஓட்டப் பந்தய ஓடு தளத்தில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

இந்த மின்சார முச்சக்கர வண்டியை எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சந்தைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக வேகா இனோவேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி பேஷான் குலபால தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படும் சாதாரண முச்சக்கரவண்டியை விடக் குறைந்த விலைக்கு இந்த முச்சக்கரவண்டியை விற்பனை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# தொடரூந்து போக்குவரத்துச் சபைக்கு 3477 மில். ரூபாய் வருமானம் இழப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக இலங்கை தொடரூந்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை என்பனவற்றுக்கு 3 ஆயிரத்து 447 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் முன்னெடுக்கப்படும் பயணங்கள் தடைப்பட்டுள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நள்ளிரவு முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் இன்மையால், தொடரூந்து திணைக்களத்திற்கு நாளாந்தம் 16.6 மில்லியன்ரூபாய் வருமானம் இல்லாமல் போயுள்ளது.

இதன்காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் 597.6 மில்லியன் ரூபாய் தொடரூந்து திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நாளாந்தம் 80 மில்லியன் ரூபாய் இலங்கை போக்குவரத்து சபையினால் ஈட்டப்பட்ட நிலையில் அந்த வருமானம் தற்போது இல்லாமல் போயுள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்ட காலப் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு 2 ஆயிரத்து 880 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடு மீள திறக்கப்பட்ட பின்னர் உடனடியாக சேவைகளை முன்னெடுக்க தயாராகவுள்ளதாக தொடரூந்து திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை என்பவற்றின் சிரேஷ்ட பேச்சாளர்கள் தெரிவித்தனர். (நி-4)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் Newly Open தனி வீடுகள் Fully Furnished 2,3,4 அறைகளுடன் மற்றும் அறைகள் நாள், கிழமை வாடகைக்கு. சிறு வைபவங்களுக்கான வசதிகளும் உண்டு. வாகன தரிப்பிடமுண்டு.

தொடர்புகளுக்கு: 077 766 7511 / 071 066 7511

(C-1493)

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் /வடமராட்சி இந்து கௌரவ குடும்பம் 1988 மிருகசீரிடம் 4ஆம் பாதம். கிரகபாவம் 32, லண்டன் PR, பொறியியல் பட்டதாரி. உயரம் 176cm மணமகனுக்கு மணமகள் தேவை. ஆங்கிலமொழித் தேர்ச்சியுடனான பட்டதாரி வரவேற்கத்தக்கது.

தொடர்பு: WhatsApp/ Viber (C-2694)

071 828 7793/ 077 161 3060




# சாயம் பூசிய நரி

வலிமை மிக்க விலங்குகள் வேட்டையாடும் இரைச்சியை தானும் உண்டு, மீந்தவற்றை, எளிய விலங்குகளுக்கு வழங்கி, உல்லாசமாக, சுக போகத்துடன் ஆட்சி நடத்தியது நீலநரி.

பதவி கிடைக்காத ஆத்திரத்தில் இருந்த நரிகள், கூடி யோசித்தன. அறிவாற்றல் நிரம்பிய முதிய நரி, "அன்பர்களே நம்மை ஆட்சி செய்யும் விலங்கு, மோசடியாக தான் மன்னர் பதவியை பிடித்துள்ளது.

அது, எல்லா அம்சங்களிலும் நம்மைப் போன்றே உள்ளது. நிறம் மட்டும் தான் நீலமாக இருக்கிறது. ஏதோ சூழ்ச்சி நடந்துள்ளதாக எனக்கு தோன்றுகிறது.

"நாளை பௌர்ணமி தினம். சபையைக் கூட்டி, அலுவல்களை மன்னர் கவனிக்கும் போது, நாமெல்லாம் ஒரு பக்கம் கூடி ஊளையிடுவோம். அப்போது, மன்னரின் உண்மை தோற்றம் புலப்படும்..." என்று கூறியது.

அந்த திட்டத்தை நரிகள் எல்லாம் ஏற்றன. மறுநாள் இரவு, நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. சபையைக்கூட்டி, அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தது நீலநரி.

சபையின் அருகே, மறைவாக கூடிய நரிகள், ஊளையிடத் தொடங்கின. அதை கேட்டதும், நீலநரி கிளர்ச்சியடைந்து, உற்சாகமாக ஊளையிடத் தொடங்கியது.



ஓடிவந்த நரிகள், "அன்பர்களே... மன்னனாக இருப்பது, நரி தான். நீங்கள் நினைப்பது போல, தேவலோக விலங்கன்று. உடலில் நீலச்சாயம் பூசி, வேஷம் போட்டு முட்டாளாக்கியுள்ளது" எனக் கூறின. விலங்குகள் திரண்டு, நீலநரியை நோக்கி பாய்ந்தன. உயிர் பிழைக்க, விழுந்தடித்து ஓடியது.

அப்போது, மழை இலேசாக தூரத்தொடங்கியது. நீல சாயம் கரைந்தது. வேஷம் கலைந்த நரியைக் கண்டு, கைகொட்டி சிரித்தன விலங்குகள்.

மன்னர் பதவியை இழந்தது நீலநரி. குழந்தைகளே... ஏமாற்றி பிழைப்பது நீண்டநாள் நீடிக்காது. நரியின் கதி தான் ஏற்படும். எப்போதும் நேர்மையை கடைப்பிடித்து, மகிழ்ச்சியாக வாழுங்கள்! (முற்றும்)

# மகாபாரதம்

**லட்சுமி அசுரரை விட்டு விலகுதற்குரிய காரணம்.**

**195**

லட்சுமி அசுரரை விட்டு விலகக் காரணங்களை இந்திரனுக்குக் கூறியதைப் பீஷ்மர் கூறுகிறார்

ஒருமுறை இந்திரன் லட்சுமியைச் சந்தித்தான். முறைப்படி பூஜைகள் செய்து, பின் பணிவுடன் "நீங்கள் எவ்விடத்தில் வாசம் செய்வீர்கள்?" என வினவினான். லட்சுமி கூறுகிறாள்.

"நான் வெற்றியை விரும்பும் வீரனிடத்தில் எப்போதும் வசிப்பேன். எப்போதும் பிறர்க்குக் கொடுக்கும் இயல்புள்ள மனிதனிடம் வசிப்பேன்.



முன்னர் உண்மையான தருமத்தை அசுரர்கள் மேற்கொண்டதால் அவர்களிடம் சில காலம் தங்கியிருந்தேன்.

காலப்போக்கில் அவர்களது போக்கு விபரீதமாக இருந்த காரணத்தால் அவர்களை விட்டு நீங்கி உன்னிடம் வந்தடைந்தேன்.

"தேவி எக்குணத்தைக் கண்டு அசுரர்களிடமிருந்து விலகினீர்"

"அறவோரிடத்தும், துணிவுமிக்கோரிடத்தும், மோட்ச மார்க்கத்தில் செல்லும் மேலோரிடத்தும் நான் எப்போதும் விரும்பியிருப்பேன்.

ஒரு காலத்தில் அசுரர்கள் தான தருமங்களில் சிறந்திருந்தனர். பெரியோர்களிடம் தொடர்புள்ளவர்களாகவும், அடக்கம் மிக்கவர்களாகவும் இருந்தனர்.

சத்தியம் தவறாதவர்களாகவும், முயற்சியுடையவர்களாகவும், சுற்றத்தைக் காப்பவராகவும் இருந்தனர். அவர்களிடம் பொறாமை இல்லாதிருந்தது.

பிறர் பொருளைக் கவரும் எண்ணம் இல்லாதிருந்தனர். பிறர் துன்பம் கண்டு மனம் இரங்கி உதவும் எண்ணம் உடையவர்களாக இருந்தனர்.

நேர்மை, பக்தி, புலனடக்கம் இவற்றில் சிறந்திருந்தனர். வேலைக்காரரிடம் அன்பாக இருந்தனர்.

அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்டுத் தக்கவாறு செயற்பட்டனர். தகுதியறிந்து தானம் அளித்தனர்.

(தொடரும்)

# இருள் சூழ்ந்த தேசத்தில் மெழுகாய் உருகி ஒளி தந்தவன் திலீபன்



இன்று புரட்டாசி 26 இன்றைய நாள் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் ஓர் மகத் தான நாள். ஈழத்தமிழர்கள் பயங்கர வாதிகள் என்றும் ஆயுதப் பிரியர்கள் என்றும் அவர்கள் மீது பூசப்பட்டிருக்கும் மிகவும் மோசமான ஒரு கறையினை நீக்கி ஈழத்தமிழர் களும் அகிம்சையின் வழியிலே நின்றவர்கள் அகிம்சைமீது தளராத நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் தளராத நம்பிக்கை என்பது அவர்க ளின் இதயத்தின் இறுதி துடிப்பு அடங் கும் வரைக்கும் அகிம்சை மீது அவர் கள் கொண்டி ருந்த நம்பிக்கை துளி அளவுகூட தளர்வ டையவில்லை என்ற ஒரு வரலாற்று உண்மையினை உலகிற்கு உணர்த்திய நாள்.

இன்றுதான் இளமைத்துடிப்பும் எத்த னையோ கனவுகளும் மிகுத்த ஓர் இளம் தளிர் ஒன்று ஈழத்தமிழர் களின் கண் முன்னே பட்டினித்தீயிலே கருகிப்போனது இன்றுதான் தியாக தீபம் அகிம்சாவாத த்தின் விடிவெள்ளி ஈழத்தமிழர்களின் வானத்தை விட்டு மறைந்துபோன நாள்.

மரணம் என்பது மனிதனுக்கே தவிர அது மாவீரனுக்கு என்றும் இல்லை இது வரலாறு சொல்லும் உண்மை பிறர் வாழ தன் உயிரை தியாகம் செய்கின்ற வர்கள் வரலாற் றில் என்றுமே வாழ்ந்து கொண்டிருப் பார்கள்!!

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலே ஒரு பாரிய சோகத்தினையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெழுர் ச்சிக்கும் முக்கியமான ஒரு காரணி யாகவும் அமைந்தது.

திலீபனின் இழப்பு அகிம்சை ரீதி யாக போராடினால் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றும் உலக த்தில் அகிம்சைதான் சிறந்த ஒரு ஆயுதம் என்றும் வரையப்பட்ட வச னம் நல்லூரான் வீதியிலே பொய்யா கிப்போனது.

ஒரு இனத்தின் விடியலுக் காக அந்த இனத்தின் விடுதலைக்காக தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை .

புத்தனின் புனிதபூமி என்றும் காந்தியின் தேசம் என்றும் உலகத் தில் தன்னை உயர்த்திக்கொள்ளும் இந்தியா கூட திலீபனின் கோரிக்கை களை ஏற்றுக் கொள்ளவில்லை.

இளமையும் துடிப்பும் மிக்க அந்த இளைஞனுக்கு எப்படி இவ்வளவு தியாக உணர்வும் அகிம்சை மீது விருப்பும் சாகும் வரையிலும் அதன் மீது தளராத நம்பிக்கையும் வந்தது என்று தெரிய வில்லை. ஆனால் அந்த அகிம்சையே அவனுக்கு எமனாகியது என்பது வேத னையான விடயம்.

திலீபன் அப்படி எதைகேட்டான் திலீபனின் கோரிக்கைகள் தான் என்ன? மனித குலத்துக்கே ஒவ்வாத ஒன் றைக் கேட்டானா? அவன்கேட்டது நியாயமானது. அவனது கோரிக்கை கள் அத்தனை யும் சிங்கள இனவாத பூதங்களால் அழிக்கப்பட்டுக்கொண்டி ருந்த தமிழ் மக்களின் விடுதலைக் கானது.

தனது இனம் இன்னொரு இனத்தி னால் அழிக் கப்பட்டு சித்திரவதைப் படுவதை கண்டு அவர்களின் விடியலு க்காக ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஏற்றுக்கொள் ளும் வரையும் உணவின்றி நீரின்றி நல்லூரான் வீதியிலே பட்டினியால் துடித்து உயிர் விட்டான் அந்த உத்த மன்.

இதிலே மிகவும் கொடுமையான விடயம் அகிம்சைக்கே ஆசானாக தன்னை காட்டிக்கொள்ளும் இந்திய தேசத்திடமே தியாகதீபம் தனது கோரி க்கைகளை முன்வைத்து அறப் போரை தொடுத்திருந்தான்.

அப்படி அவன் எதைக் கேட்டான் மனித குலத்திற்கு ஒவ்வாத விரோ தமான எதையாவது கேட்டானா அவனது ஐந்து கோரிக்கைகளிலே ஒன்றைக் கூட இன்றுவரைக்கும் நிறைவேற்ற முடியாதவர்கள் அகி ம்சை பற்றி பேசுவது பொருத்தமற்ற கேலிக்கிடமான செயற்பாடாகும் இந்திய தேசத்திடம் அவன் முன் வைத்த கோரிக்கைகள்.

1. மீளக்குடியமர்தல் என்ற பெய ரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்ட மிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இரா ணுவ பொலிஸ் தடுப்பு முகாம்க ளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அர சியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்ப டவேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமை யாக நீக்கப்படவேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றா கக் களையப்படவேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதி தாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப் படவேண்டும்.

விடுதலைப்புலிகள் வன்முறை யாளர்கள் என்றும் அவர்கள் பயங் கர வாதிகள் என்றும் முத்திரை குத்திய இந்தியா உட்பட உலக நாடுகள் அனை த்தும் அன்று திலீப னின் கோரிக் கைகளுக்கு மதிப்ப ளித்திருந்தால் அவனின் அகிம்சை வெற்றி பெற்றிருந் தால் இன்று இந்த அளவிற்கு ஆயுதக் கலாசாரம் வளர் ச்சியடைந்திருக்காது ஈழத்தமிழர் களைப் பொறுத்தவரை திலீபனுடன் அகிம்சையும் மரணித்துப் போனது என்பது தான் உண்மை.

எனவே தான் அவர்கள் ஆயுத ங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டியிருந்தது. திலீபன் இந்த மண்ணை விட்டுச் சென்று 34 வரு டங்கள் ஆகிவிட்டது.

ஆனால் இன்னமும் அவனது கோரிக் கைகள் ஏற்றுக்கொள்ள வில்லை. அகிம் சையினை நம்பி மரணித்த அந்த மாவீரனின் இழப் புக்கு காரணமான இந்தியா அதற் காக மன்னிப்பும் கேட்க வில்லை ஒரு சிறிய ஆதங்கத்தைக் கூட வெளிப்படுத்தவில்லை.

இந்தியா தனது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளும் என்று ஆழமாக நம்பிய திலீபனை இந்தியாவின் மௌனமும் பொறுப்பற்ற தன்மை யும் கொன்று போட்டது.

மரணப்படுக்கையிலே திலீபன் சொன்னது போல மக்கள் புரட்சி ஒன்று வெடிக்கட்டும் ஒன்றுபட்ட தமிழ்ச் சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்காவிடின் ஒட்டுமொத்த தமிழி னத்தின் குரல் வளையினை ஆதி க்க சக்திகள் நசுக்கி விடும்.

சுயநலமற்ற மனிதர்களாக மண் ணிலே வாழும்வரை சுயமரியாதை யுடன் வாழ சுதந்திரக்காற்றினை சுவாசிக்க தியாக தீபம் திலீபனை மனதில் நிறுத்துவோம்.

## எம் நெஞ்சில் அமைதியாக உறங்கு



திலீபன்…
போர் மட்டுமே தெரியும்…
புலிகளுக்கு என்றவர்க்கு…
நீர் ஆகாரம் கூட இலாது - புரட்சியில்…
நீந்தவும் தெரியும் என்று சொல்லி…
தன்னை தானே…
வேருக்கு உரமாக்கிய செம் பருத்தி!!
கூச்சல்களும் கூவல்களும்…
செத்து செத்து விழுந்தாலும்…
எதிரி கை முத்த மிடும் பிழைப்பும்…
தொடர் கதையாய் இன்னும் இருந்தாலும்…
ஒரு சுடர் அணைந்து போச்சுதே…
இன்னும் இருட்டு…
இதயத்தின் ஒரு மூலையில்!!
உயிர் உருக உருக …
தனை எரித்து போனது ஒரு…
ஊரெழுவின் வர்த்தி…
ஊருக்கு வெளிச்சம் வந்ததோ இல்லையோ…
உன் பேருக்கு - இறப்பு என்றுமேயில்லை!
தியாகம் என்பார்…
அதன் உச்சம் என்பார்…
அது எது-?
ஊர் காத்த - உயிரும் உனக்கு இல்லை…
உயிர் ஓடி போன உடலும் மண்ணுக்கு இல்லை…
மொத்தமாய் நீயானாய்…
உதடு -பஞ்சு பஞ்சாய் வெடிக் கையிலும்…
உன் நெஞ்சில் எழுந்த முணு முணுப்பு…
வென்றே ஆகும் …
நம்புறோம்…
அதுவரை - எம் நெஞ்சில் நீ உறங்கு …
சுமையாய்!!


-நன்றி இணையம்-

# பாரதம்

## ஆக்கஸ் ஒப்பந்தத்தினால் வலுவிழக்கும் குவாட்

# சீனாவைப் போன்று இந்தியா உருவ
# முன்னெச்சரிக்கையாக தடுக்கும் அமை





(வோஷிங்டன்)

**இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ‘குவாட்’ அமைப்பு உள்ள நிலையில் அதே பிராந்தியத்தில் இந்தியா, ஜப்பானை தவிர்த்து ஆக்கஸ் ஒப்பந்தம் எதற்கு? என்ற கேள்வி பல்வேறு தரப்பிலும் எழுந்துள்ளன.**

இந்தோ-பசுபிக் கடற் பிராந்தியத்தில் சீனாவின்ஆக்கிரமிப்பு முயற்சியை முறியடிக்க 2017 ஆம் ஆண்டில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து குவாட் அமைப்பினை உருவாக்கின.குவாட் தலைவர்கள் நேரடி யாக பங்கேற்கும் முதல் உச்சி மாநாடு அமெரிக்க ஜனாதிபதிபிடன் தலைமையில் நடைபெற்றது.

இது பற்றிய கருத்துக் கணிப்புகள் மற்றும் விமர்சனங்கள் தற்போது வெளியாகியுள்ளன.இந்தோ-பசுபிக் கடலில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் இணைந்து ‘ஆக்கஸ்’ பாதுகாப்பு ஒப்பந்தத்தினை உருவாக்கியுள்ளன.

இந்த அமைப்பின் கீழ் அமெரிக்காவும் பிரிட்ட னும் இணைந்து 12 அணு நீர்மூழ்கிக் கப்பல்களைஅவுஸ்ரேலியாவுக்கு வழங்கியுள்ளன.

ஏலவே இந்தோ-பசுபிக் பிராந்திய த்தில் சீனாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ‘குவாட்’ அமைப்பு உள்ள நிலையில் அதே பிராந்தியத்தில் இந்தியா, ஜப்பானை தவிர்த்து ஆக்கஸ் ஒப்பந்தம் எதற்கு என்ற கேள்வி பல்வேறு தரப்பிலும் எழுந்துள்ளன.

இது குறித்து வெளியுறவு விவகாரத்துறை நிபுணரும் எழுத்தாளருமான பிரம்மா செல்லானே

# இசை இருக்கும் வரை நினைவிருக்கும்...



**தென்னிந்திய பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி பாலசுப்பிரமணியம் மறைந்து நேற்றுடன் ஓராண்டு**

ஆரம்ப காலகட்டத்தில் தனது தமிழ் உச்சரிப்புக்காக புறக்கணிக்கப்பட்ட எஸ்.பி.பி, எம்.எஸ்.விஸ்வநாதன் ஆலோசனையை ஏற்று ஒரு வருடம் பயிற்சி பெற்று சினிமாவில் பாடும் வாய்ப்பினைப் பெற்றார். சாந்தி நிலையம் படத்திற்காக பி.சுசிலாவுடன் இணைந்து பாடிய "இயற்கை என்னும் இளைய கன்னி" பாடல் தான் எஸ்.பி.பி பாடிய முதல் தமிழ் சினிமா பாடலாக கருதப்படுகிறது. தொடர்ந்து எம்.ஜி.ஆருக்காக அடிமைப் பெண் படத்தில் அவர் பாடிய "ஆயிரம் நிலவே வா" பாடல் மிகப் பெரிய ஹிட்டானது.

எம்.எஸ் விஸ்வநாதன் தமிழ் சினிமாவில் கோலோச்சி வந்த காலகட்டத்தில் அறிமுகமான எஸ்.பி பாலசுப்ரமணியம் இளையராஜா இசையமைப்பாளராக வலம் வந்த நேரத்தில் பின்னணி பாடகராக உச்சத்தில் இருந்தார். அதனை தொடர்ந்து ஏ.ஆர் ரஹ்மான் தலைமுறை தொடங்கி அனிருத் தலைமுறை வரை பல இசையமைப்பாளர்களின் இசையில் தனது காந்தக்குரலால் ரசிகர்களை வசீகரித்தார்.



கேளடி கண்மணி படத்தில் "மண்ணில் இந்த காதலன்றி" பாடலையும் அமர்க்களம் படத்தில் ‘சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்" பாடலையும் மூச்சுவிடாமல் பாடி இந்த தலைமுறை ரசிகர்கள் வரை வியப்பில் ஆழ்த்தினார். மேலும் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களை பாடியுள்ள எஸ். பி பாலசுப்ரமணியம் உலகின் அதிக பாடல்களை பாடிய சாதனைக்காக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். மேலும் ஒரே நாளில் 21 பாடல்களை பாடிய பாடகர் என்ற தகர்க்க முடியாத சாதனையையும் வசப்படுத்தினார்.

நான்கு மொழிகளில் சிறந்த பாடகருக்கான தேசிய திரைப்பட விருதினை 6 முறை வென்ற எஸ்.பி.பி தெலுங்கு சினிமாவிற்கு ஆற்றிய பங்களிப்பிற்காக ஆந்திரா மாநில அரசின் நந்தி விருதினை 25 முறை பெற்றுள்ளார். ஏராளமான தமிழக மற்றும் கர்நாடக அரசு விருதுகளையும் பெற்றுள்ளார். இந்திய சினிமாவிற்கு ஆற்றிய இசைச் சேவைக்காக என்டிஆர் தேசிய விருது இந்திய சினிமாவின் Personality of the Year என்ற சில்வர் பீக்காக் விருது மத்திய அரசின் பத்மஸ்ரீ பத்மபூஷன், பத்மவிபூஷன் ஆகிய விருதுகளையும் வென்றுள்ளார் எஸ்.பி.பி.



கடந்த ஆண்டு கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் கொரோனாவிலிருந்து மீண்டார்.

இருப்பினும் அவருக்கு நுரையீரல் தொற்று ஏற்பட்டது. இதனால் உடல் நலம் பாதிக்கப்பட்டு 50 நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பின்னணி பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் கடந்த ஆண்டு செப் 25 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி காலமானார். இவரது உடல் திருவள்ளூர் மாவட்டம் தாமரைபாக்கத்தில் அமைந்துள்ள அவருக்குச் சொந்தமான பண்ணை வீட்டில் 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. எஸ்.பி.பி மறைவு இசை உலகில் யாராலும் நிரப்ப முடியாத பேரிழப்பு.

அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக தமிழ் சினிமாவை ஆக்கிரமித்திருந்த எஸ்.பி.பியின் காந்தக் குரல் காற்றில் கரைந்தது தமிழ் சினிமா இரசிகர்கள் மனதில் ஆறாத வடுவாக அப்படியே தங்கி விட்டது.

ந
கை
த



குற்ற
டுவது
ஆகிய
ரும"
வித்து
வரை
ஆட்சி
யான
த்தில்
துக் 
வது,
தண்ட
தற்போ
கள்
அடுத்
இருந்
இருக்
எதிர்ப
தலிபா
நூறு
நிறுவ
யில்

# வெளிநாடு

## ...வாவதை ...மெரிக்கா



...ந்தியா, ...க்கஸ் ...கேள்வி ...ழுந்து ...பு விவ ...எழுத் ...மானே

கூறியதாவது, ஆக்கஸ் என்ற அமைப்பு உருவாகி இருப்பதனால் குவாட் அமைப்பின் முக்கியத்துவம் நாளடைவில் வலுவிழக்கும். அமெரிக்காவுடனான உறவில் அவுஸ்திரேலியா அனுபவிக்கும் பலன்கள் அனைத்தும் இந்தியா, மற்றும் ஜப்பானுக்கு கிடைக்காமல் போகும். எனவே அமெரிக்காவுடனான இரண்டாம் கட்ட உறவைப் பேணும் நிலைக்கு இந்தியா தள்ளப்படும். மேலும் இந்த புதிய அமைப்பின் வாயிலாக அவுஸ்ரேலியாவிலிருந்து இலாபகரமான இராணுவ ஒப்பந்தங்கள் அமெரிக்காவுக்கும் கிடைக்கும் எனக் கூறினார்.

குறிப்பாக இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில், சீனாவைப் போல இந்தியாவும் மிகப்பெரிய சக்தியாக உருவாகி விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வு அமெரிக்காவுக்கு இருப்பதனாலேயே இது போன்ற தனியான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறிருக்க குவாட் மாநாடு மற்றும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள மோடி நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனை சந்தித்து இரு தரப்பு உறவினை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களை விவாதித்தமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# சீனக் காவலில் இருந்த இரண்டு கனேடியர்கள் ஆயிரம் நாட்களுக்கு பிறகு விடுவிப்பு

(ஒட்டாவா)

சீனக் காவலில் இருந்த இரண்டு கனேடிய பிரஜைகள் விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதிப்படுத்தியுள்ளார்.

முன்னதாக கடந்த 2018 ஆம் ஆண்டு சீனாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான ஹுவாய் நிறுவனத்தின் முதன்மை நிதி அதிகாரி மெங்வான்சூவை கனேடிய பொலிஸார் கைது செய்தனர்.

மேற்காசிய நாடான ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீறியதாகக்கூறி, அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக கனேடிய அரசாங்கம் பின்னர் விளக்கம் அளித்தது.

இதனால், ஆத்திரமடைந்த சீனா, இதற்குப் பழி வாங்கும் வகையில் அதே ஆண்டு கனடாவைச் சேர்ந்த முன்னாள் தூதரக அதிகாரி மைக்கேல் கோவ்ரிக் மற்றும் வர்த்தகர் மைக்கேல் ஸ்பாவோர் ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சீனாவில் கைது செய்தது. இவர்கள் உளவு பார்த்ததாக சீனா குற்றஞ்சாட்டியது.

மெங்கை கைது செய்ததற்கு பதிலடியாக, கனேடியர்களை சீனா தடுத்து வைத்திருப்பதாக விமர்சகர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் இதை சீனா கடுமையாக மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

**இந் நிலையில், சீனக் காவலில் இருந்த இரண்டு கனேடிய பிரஜைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில்,**

**கடந்த 1,000 நாட்களாக, அவர்கள் வலிமை, விடா முயற்சி, நெகிழ்ச்சி மற்றும் கருணை ஆகியவற்றைக் காட்டியுள்ளனர்' எனக் கூறினார்.** (7-4)

# கிரிப்டோ நாணயங்களின் பரிவர்த்தனை சட்டவிரோதமானது

## சீனா அறிவிப்பு

(பீஜிங்)

அனைத்து கிரிப்டோ நாணயங்களின் (டிஜிட்டல்) பரிவர்த்தனைகளும் சட்டவிரோதமானது என்று சீனாவின் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

"மெய்நிகர் நாணய வழியான பரிவர்த்தனைகள் அனைத்தும் சட்டவிரோத நிதி நடவடிக்கைகள் மற்றும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளன" என்று சீன மக்கள் வங்கி தனது இணையதளத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவித்தது.

அதிகாரப்பூர்வமற்ற டிஜிட்டல் பணத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் சீனாவின் பிரச்சாரமாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனாவின் இந்த அறிவிப்பு பிட்காயின், எத்தேரியம் மற்றும் பிற டிஜிட்டல் நாணயங்களின் நிதி அமைப்பை சீர்குலைத்துள்ளதுடன், பணமோசடி மற்றும் பிற குற்றங்களையும் கட்டுப்படுத்துகின்றது.

சீனா உலகின் மிகப் பெரிய கிரிப்டோ-நாணய சந்தைகளில் ஒன்றாகும். சீன அறிவிப்பை அடுத்து பிட்காயின் விலை 2,000 அமெரிக்க டொலர்களுக்கும் (+ 1,460) அதிகமாக சரிந்தது. (7-4)

# நாட்டின் நன்மை கருதியே கைகளை வெட்டும் தண்டனை

## தலிபான் அரசு அறிவிப்பு



(காபுல்)

'ஆப்கானில், கடுமையான குற்றங்களுக்கு கையை வெட்டுவது, தூக்கிலிட்டு கொல்வது ஆகிய தண்டனைகள் தொடரும'' என, தலிபான் அரசுஅறிவித்துள்ளது. கடந்த 1995 - 2001 வரை ஆப்கானை தலிபான் ஆட்சி செய்த போது, கடுமையான குற்றங்களுக்கு பொது இடத்தில் வைத்து கல்லால் அடித்துக் கொல்வது, கையை வெட்டுவது, தூக்கிலிடுவது உள்ளிட்ட தண்டனைகள் வழங்கப்பட்டன. தற்போது 'ஆப்கானை தலிபான்கள் மீண்டும் கைப்பற்றியதை அடுத்து, முந்தைய ஆட்சியில் இருந்தது போன்ற தண்டனைகள் இருக்காது' என, உலக நாடுகள் எதிர்பார்த்தன. இந்நிலையில், தலிபான் நீதித்துறை அமைச்சர் நூருதீன் துராபி, தனியார் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: கடந்த ஆட்சியில், விளையாட்டு மைதானத்தில் பொது மக்கள் முன்தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. இதை பல நாடுகள் விமர்சித்தன.

ஆனால் நாங்கள், அந்த நாடுகளின் சட்டங்கள் அல்லது தண்டனைகள் குறித்து விமர்சிக்கவில்லை. அதனால், யாரும் எங்களுக்கு எப்படி சட்டம் இயற்றுவது எனக் கூறத்தேவையில்லை. நாங்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுகிறோம். குரானில் குறிப்பிட்டுள்ள படி சட்டங்களை அமல்படுத்தி தண்டனை வழங்குகிறோம்.

நாட்டின் பாதுகாப்புக் கருதி, குற்றம் செய்வோரின் கைகளை வெட்டுவது அவசியம். இது போன்ற தண்டனைகள் குற்றங்கள் குறைய உதவும். பொது இடத்தில் தண்டனையை நிறைவேற்றலாமா என்பது குறித்து அமைச்சரவை பரிசீலித்து வருகிறது எனக் கூறினார். (7-4)

# காலம் கடந்தால் அணுசக்தி ஒப்பந்தம் கைநழுவி விடும்

## ஈரானை எச்சரிக்கும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

வல்லரசு நாடுகளுடன் நின்று போயுள்ள அணுசக்திப் பேச்சுவார்த்தையை ஈரான் உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

காலம் கடந்தால், அணுசக்தி ஒப்பந்தத்தை மீட்டெடுப்பதற்கான வாய்ப்பு கைநழுவிவிடும் என்றும் ஈரானை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் கூறியதாவது:

அணுசக்திப் பேச்சுவார்த்தைக்கு ஈரான் திரும்பாமல் இழுத்தடித்து வருவது அமெரிக்காவின் பொறுமையை சோதிப்பதாக உள்ளது.

இந்த நிலை நீடித்தால், கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தை மீட்கவே முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

அணுசக்தி ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக் கொண்டன. ஒபாமா ஆட்சிக் காலத்தின் போது கையெழுத்தான அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்து வந்த ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். அத்துடன், ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது மீண்டும் விதித்தார்.

அதற்குப் பதிலடியாக, ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இதனால் அந்த ஒப்பந்தம் முறிந்துபோகும் அபாயம் நிலவி வருகிறது.

அந்த ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தை வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், ஈரானில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்ட தலைமை நீதிபதி இப்ராஹிம் ரய்சி வெற்றி பெற்றார். அதையடுத்து, புதிய அரசு அமையும் வரை வியன்னா பேச்சு வார்த்தையை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர். (7-4)




# பொல்லு



பொல்லு ஒரு பெருமையின் அடையாளமாக அனுபவத்தினதும் ஆளுமையினதும் செங்கோலாக, சின்னமாக இருந்த ஒரு காலம் இருந்தது.

அன்றைய காலத்திலே உடையார் ஒரு வைபவத்திற்கு போக முடியாமல் இருந்தால் உடையாரின் பொல்லு அவரின் பிரதிநிதியாக அங்கே அனுப்பி வைக்கப்படும்.

பிரபுக்கள் பலரும் தமது அந்தஸ்தின் சின்னமாக பொல்லைக் கருதினர். அவர்கள் பொல்லு இன்றி வெளியே செல்வது அரிதாகக் காணப்பட்டது.

ஆனால் இன்று பொல்லு பாவிப்பது ஒரு பலவீனத்தின் அடையாளமாகப் பலரும் கருதத் தொடங்கி இருப்பது ஒரு வேதனையான உண்மை.

பொல்லு பாவிப்பது மூட்டுகளுக்கும் முள்ளந்தண்டிற்கும் ஒரு பக்க பலத்தைக் கொடுத்து அவற்றைப் பாதுகாப்பதுடன் பல எலும்பு உடைவுகளையும் தடுத்து நிறுத்துகிறது.

பொல்லுப் பாவனை ஒருவர் தவறிவிழும் சந்தர்ப்பங்களைக் குறைப்பதுடன் மூட்டுவலி, உடல் வலி என்பவற்றையும் குறைப்பதற்கு உறுதுணையாக இருக்கிறது.

இவ்வாறாக பொல்லுப் பாவனை பயனுடையதாக இருந்தும் அதனைக் கொண்டு செல்வதற்கும் பாவிப்பதற்கும் நாம் தயங்குவதற்கு காரணம் என்ன?

"சுவரிலும் கதிரை மேசைகளிலும் பிடித்து நடந்தாலும் நடப்பேனே தவிர பொல்லுப் பிடிக்கும் அளவுக்கு நான் பலவீனமானவன் அல்ல" என்று அடம்பிடிப்போர் பலர்.

பொல்லு பாவியுங்கள் என்று வற்புறுத்த முயன்று கடைசியில் பொல்லுக் கொடுத்து அடி வாங்கிய கதையாக மாறிப்போன சம்பவங்களும் உண்டு. பொல்லுப் பாவனை சம்பந்தமான எமது சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட வேண்டிய தேவை ஒன்று உணரப்படுகிறது.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

# பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்து கொண்டே இருப்பது...?

பயப்பட வேண்டிய விடயங்களுக்கு பயம் இன்றி இருந்து கொள்வது பயமானது, ஆபத்தானது என்றும் அதேசமயம் பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்து கொண்டே இருப்பதும் பயம் என்றும் நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்வில் பயம் கொள்ளத் தேவையற்ற பலவற்றிற்கு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பால் குடிக்க பயம், தயிர் சாப்பிடப் பயம், தவசி முருங்கை சாப்பிடப்பயம், இரவிலே இலை வகை உள்ள உணவுகள் உண்ண பயம், சில உயிர்க்காப்பு மருந்துகளை உள்ளெடுக்க பயம், இறால் சாப்பிடப் பயம், அகத்தி மரத்தை வீட்டில் வளர்க்க பயம், முட்டை சாப்பிட பயம், முட்டு வருத்தத்தால் கஷ்டப்படினும் பம்பாவிக்க பயம். இவ்வாறாக பயப்படத் தேவை அற்ற பலவற்றிக்கு நாம் பயந்து பயந்து வாழ்வதன் காரணம் என்ன?

அதேவேளை பயப்பட வேண்டிய பலவற்றிற்கு பயம் இன்றி வாழ்ந்து பல ஆபத்துக்களை தேடிக்கொள்கிறோமே? இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

உடல் பருத்திருந்தும் உல்லாசமாய் உலாவி வருகிறோம். சந்தோசமாக சோடா குடிக்கிறோம். எதுவித பயமுமின்றி உடற்பயிற்சி செய்யாதிருக்கிறோம். உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று விளக்கமும் கொடுக்கின்றோம். தினமும் தொலைக்காட்சிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்து மகிழ்கிறோம். இரசாயனம் சேர்க்கப்பட்ட மென்பானங்களை அருந்துவதில் பெருமை கொள்கிறோம். சினிமா கதாநாயகர்கள் பாணியில் குடித்து, புகைத்து, கும்மாளம் அடித்து கதாநாயகர்களாய் உலா வருகிறோம். வாகனம் ஓடுவதில் "திறமையை" காட்ட முயல்கிறோம்.

இவ்வாறாக பயம் கொள்ள வேண்டிய பல விடயங்களை பயமின்றிச் செய்யத் துணிந்ததன் காரணம் என்ன?

இந்த இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

# பாடசாலைகளை திறப்பதற்கு தடுப்பூசி வரை காத்திருக்க வேண்டியதில்லை

## பசில் அறிவுறுத்து

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சுகாதார பரிந்துரைகளை நேரடியாக ஆளுநர்கள் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அறிவுறுத்தினார்.

கொவிட் தடுப்புக் குழுவின் சிறப்பு கூட்டத்தில் இந்த அறிவுறுத்தலை அவர் விடுத்தார்.

யுனிசெஃப் மற்றும் இலங்கை குழந்தை மருத்துவர்கள் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும் பாடசாலைகளை திறக்க தடுப்பூசி முடியும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று சுட்டிக் காட்டினார்.

குழந்தைகளின் கல்வி எந்த இடையூறும் இல்லாமல் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளை விரைவில் மீண்டும் திறக்க வேண்டும் என்றும் சரியான சுகாதாரப் பரிந்துரைகளின் கீழ் நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# 150 வருட பழமை வாய்ந்த ஆலயம் மரம் முறிந்து விழுந்து சேதம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் மீது நேற்று முன்தினம் வீசிய காற்றினால் மரத்தின் பாரிய கிளை முறிந்து வீழ்ந்ததில் ஆலயத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆலய மூலஸ்தானத்தின் பின் உள்ள அரச மரத்தின் பாரிய கிளையே இவ்வாறு காற்றினால் ஆலயத்தின் மீது வீழ்ந்துள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஆலய மூலஸ்தானம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்தின் கட்டடச் சுவர்களிலும் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாலயம் சுமார் 150 ஆண்டு காலம் பழமை வாய்ந்த ஆலயமாகக் காணப்படுவதுடன், ஆலயத்தினுள் உள்ள குறித்த அரச மரமும் பழமை வாய்ந்தது எனவும் தெரிவித்தனர். (நி-4)

# சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய புத்தகசாலைகள் திறக்கப்பட்டன

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டத்துக்கு மத்தியிலும் நாடாளவிய ரீதியிலுள்ள புத்தக சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

கடுமையான சுகாதார வழிகாட்டல்களுக்கு அமையவே இந்த புத்தகசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. புத்தகசாலைகளுக்கு ஒரே நேரத்தில் உள்நுழைவோரின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தேவையான புத்தகங்களை மட்டுமே காண்பித்து கேட்டுப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையும் சில புத்தக நிலையங்களில் பின்பற்றப்பட்டுள்ளன. இன்னும் சில புத்தகசாலைகளில், புத்தகங்களை தொடாமல், பெயரைக்குகூறி கேட்டுப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, புத்தகசாலைகளை திறப்பதற்கான அனுமதி, பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# திடீரென பற்றி எரிந்த முச்சக்கரவண்டி

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

முச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் திடீரெனத் தீப்பற்றி எரிந்ததில் அதில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மஹவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்லேவ, கொன்வெவ பகுதியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



கொன்வெவ பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நம் வாழ்க்கை நம் கையில்!

பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர். அதிலே மூத்தவர் தருமர். அவர் ஒரு நாள் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்திருந்தாராம். அப்பொழுது தெருவில் ஒரு யாசகன் வந்திருக்கின்றான். இவர் முன்னால் வந்து நின்று யாசகன் யாசகம் கேட்டிருக்கின்றான். அந்த சமயத்திலே தருமர் ஏதோ வேலையா இருந்திருக்கின்றார். அதனால் நாளைக்கு வா என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார். அவனும் சரி என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

பீமன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே என்ன செய்தான். தெரியுமா? ஒரு முரசை எடுத்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடினான். முரசை அடித்துவிட்டு ஏதோ சொல்ல ஆரம்பித்து விட்டான் தருமருக்கும் இது தெரிந்தது. என்ன ஆகிவிட்டது உனக்கு? என்று கேட்டார்.

அதற்குப் பீமன் சொன்னார். நான் கிராம மக்களுக்கு என் அண்ணன் காலத்தை வென்றுவிட்டார் என்று சொல்லிவிடப் போகின்றேன் என்றான்.

ஏன் அப்படி சொல்லிப் போகின்றாய்? என்றார்.

நீங்கள் யாசகனை நாளைக்கு வரச் சொன்னீர்களே நீங்கள் நிச்சயமாக நாளைக்கு இருப்பீர்களா? அந்தப் யாசகனும் நாளைக்கு உயிரோடு இருப்பானா? நாளைக்கு நீங்கள் இருந்தாலும் யாசகம் போடும் மனோபாவம் உங்களுக்கு இருக்குமா? யாசகம் நிச்சயம் போடுவீர்களா? நாளை வரை அவன் யாசகனாகவே இருப்பான் என்பது நிச்சயமா? நாளைக்கு உங்கள் சந்திப்பு நிச்சயம் நடக்குமா?

நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள்...அதனாலே தான் அவ்வளவு நிச்சயமாக நாளைக்கு வரச் சொல்லியிருக்கின்றீர்கள். இது எவ்வளவு பெரிய விடயம்? நேரமாகிவிட்டது. நான் ஊருக்குள் போய் உடனே எல்லோருக்கும் இதைச்சொல்லி விடவேண்டும். தாமதிக்க முடியாது. ஏன் என்றால் இந்தநேரம் போய்விட்டால் அடுத்த நாழிகை எனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. என்றான் பீமன்.

உடனே தருமர் சொன்னார். தம்பி கொஞ்சம் பொறு...நான் தவறு செய்து விட்டேன்..பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதன் தான் அப்படிப் பேச முடியும். அப்படி வாக்குறுதி தரமுடியும். அந்த யாசகனை இப்பொழுதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வைத்துவிடுகின்றேன்.. நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? என்றார்.

இதிலிருந்து நாம்என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நிகழ்காலம் தான் எங்கள் கையில் இருக்கின்றது. அதைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது எங்கள் பொறுப்பு.

ஒரு ஊரிலே ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் எதிர்காலத்தைப் பற்றியே அதிகமாக சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் ஜோசியத்தைப் பொய்யாக்கி விடவேண்டும் என்று இரண்டு இளைஞர்கள் தீர்மானம் செய்தார்கள். அதற்காக ஒரு திட்டம் போட்டார்கள்.

அது குளிர்காலம். ஒரு இளைஞன் பெரிய கோட்டு ஒன்றை சட்டைக்கு மேலே போட்டுக் கொண்டான். அந்த மேல் கோட்டுக்குள்ளே, ஒரு புறாவை மறைத்து வைத்துக் கொண்டான். இரண்டு பேரும் அந்த ஜோசியர் வீட்டுக்குப் போனார்கள். அவரைப் பார்த்தார்கள்.

இதோ பாருங்கள்..இந்தக் கோட்டுக்குள்ளே ஒரு புறாவை மறைத்து வைத்திருக்கின்றோம். அந்தப் புறா இப்பொழுது உயிரோடு இருக்கா..இறந்து போய்விட்டதா.. இதை நீங்கள் சொல்ல வேண்டும். சரியாக சொல்லிவிட்டால் உங்கள் ஜோசியத்தை நம்புகின்றோம்.. என்றார்கள்.

இவர்கள் மனதுக்குள்ளே என்ன திட்டம்.. என்றால் புறா உயிரோடு இருக்கு என்று சொல்லிவிட்டார் என்றால்.. அப்படியே கையாலே அமுக்கிக் கொன்று விடுவது.. செத்துவிட்டது என்று சொன்னார் என்றால் அப்படியே உயிரோடு எடுத்துக் காட்டி விடுவது. இது தான் அவர்கள் திட்டம். அவர் என்ன பதில் சொன்னாலும் அவர் சொல்வது பொய் என்று நிரூபித்துவிடலாம் என்பது அவர்கள் நம்பிக்கை. இந்த ஜோசியர் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்று நம்பினார்கள். ஆனால் அந்த ஜோசியர் சொன்ன பதில் அந்த இளைஞர்களைத் திகைக்க வைத்துவிட்டது. அவர் என்ன சொன்னார் தெரியுமா?

உங்கள் கோட்டுக்குள்ளே இருக்கின்ற புறா உயிரோடு இருக்கா செத்துப் போச்சா என்று தான் கேட்கின்றீர்களா? அது உங்கள் கையிலே இருக்கு.. அது சாகவும் இல்லை உயிரோடும் இல்லை.. அதன் வாழ்வும் சாவும் உங்கள் கையிலே தான் இருக்கு.. என்றார். இந்த இளைஞர்கள் தோல்வியை ஒத்துக் கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

அதனால் எங்கள் வாழ்க்கை என்பது எங்கள் கையிலே தான் இருக்கு. நாம் நல்லா இருக்கிறதற்கும் அப்படி இல்லாமல் போவதற்கும் காரணம் நாம்தான்.

இதைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு விநாடியையும் அனுபவித்து வாழுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். ஒரு வைத்தியசாலை படுக்கையிலே இருந்த நோயாளி சொன்னார். டாக்டர் என் வாழ்வும் சாவும் உங்கள் கையிலே தான் இருக்கின்றது. ஏன் என்றால் இப்பொழுது எனக்கு ஒப்ரேஷன் செய்யப் போறது நீங்கள் என்றார். பயப்படாதீர்கள்..எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்.. என்றார் அந்த டாக்டர்.

அதற்கில்லை டாக்டர் இதுவரைக்கும் நான் ஆஸ்பத்திரி பக்கமே வைத்தியத்திற்கு என்று வந்ததில்லை.. இது தான் எனக்கு முதல் ஒப்ரேஷன் அது தான் பயமாக இருக்கு.. என்றார் அவர். அதற்கு அந்த டாக்டர்.

எனக்கும் தான் இது முதல் ஒப்ரேஷன்..அதற்காக நான் என்ன பயப்படுகின்றேனா பாருங்கள் என்றார்.

# வடக்கு -கிழக்கு எம்.பிக்களை இணைக்கும் முயற்சியில்

# முஸ்லிம், மலையக எம்.பிக்களையும் இணைக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



(குருமன்காடு)

**வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை இணைக்கும் முயற்சியை வரவேற்பதுடன், முஸ்லிம் மற்றும் மலையக பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைக்க வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆலோசனை வழங்கியுள்ளார்.**

வவுனியாவில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தவத்திரு அகத்தியார் அடிகளாரும், திருகோணமலை மாவட்ட ஆயரும் இணைந்து வடக்கு கிழக்கில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எங்களுடைய மக்களது பிரச்சனைகளை ஒருமித்த நேர்கோட்டில் கையாள்வதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகிறது.

ஒற்றுமை முக்கியம் என்ற அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி எங்களது இனத்தின் பிரச்சினையை ஒற்றுமையாக உலகத்திற்கு சொல்லுகின்ற ஒரு வாய்ப்பை இந்த முயற்சி ஏற்படுத்தும்.

இந்த விடயத்தில் ஒரு ஆலோசனையை சொல்ல விரும்புகின்றேன். வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களுடைய பிரச்சனைகளை எடுத்துரைப்பதற்காக அவர்களது தேசிய பிரச்சனையை வெளிக் கொண்டு வரும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது முஸ்லிம் தலைவர்களையோ இணைத்து கொள்ள வேண்டும் என்பது எனது ஆலோசனை. இரண்டாவது மலையகம் சம்மந்தமாக மக்கள் படுகின்ற துன்பங்களை வெளியில் கொண்டு வருகின்ற மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இந்த விடயத்தில் உள்வாங்க வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைக்கின்றேன். ஒற்றுமையாக எங்களுடைய மக்களது பிரச்சனைகளை வெளியுலகிற்கு கொண்டு வருகின்ற போது அது மக்கள் சக்தியாக பார்க்கப்படும். இது தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். அந்த வகையில் இந்த முயற்சிக்கு எங்களுடைய ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.(7-4-6-250)

# ஐந்தடி வான் வாய்க்காலுக்குள் பாய்ந்தது முச்சக்கரவண்டி - சாரதி தப்பி ஓட்டம்

(முறிகண்டி)

கிளிநொச்சி ஐந்தடி வான் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.



குறித்த முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஐந்தடி வான் பாலத்தில் பயணித்துக்கொண்டிருந்தவர்கள் மீது மோதி அதன் தொடராக இரணைமடுவிலிருந்து நீர் வெளியேறிப் பாயும் வாய்க்காலுக்குள் பாய்ந்துள்ளது. சம்பவத்தில் எவருக்கும் பாரிய ஆபத்துக்கள் ஏற்படவில்லை.

விபத்தினால் முச்சக்கர வண்டி நீரில் மூழ்கிய நிலையில் அதனை செலுத்தி வந்த சாரதி அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (7-4-6-100)



பிரான்ஸ்-கனடா இன்ரநெசனல் றிலிவ் என்ற அமைப்பின் நிதிப் பங்களிப்பில் ஊடகவியலாளர்களால் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் க.ராகுலனிடம் நேற்று ஒரு தொகுதி ஒட்சிசன் மாஸ்க் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-சதீஸ்)

# மடுவில் பங்குத்தந்தைக்கும் விவசாயிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம்

(நெளுக்குளம்)

மன்னார் மடு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் அமைந்துள்ள கோவில் மோட்டை விவசாயிகளுக்கும் பெரிய பண்டிவிரிச்சான் பங்கு தந்தைக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வயல் காணியில் வைத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த விவசாயிகள் 40 வருடங்களுக்கு மேலாக குறித்த வயல் காணியில் விவசாயம் செய்து வருகின்ற போதும் அந்தப் பணியை தமக்கு வழங்குமாறு மடு ஆலய நிர்வாகம் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்துள்ளது.

இதன் விளைவாக விவசாயிகள் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக போராடி வருகின்ற நிலையில் மாகாண காணி ஆணையாளர் மற்றும் வட மாகாண ஆளுநர் அவருடைய அனுமதியின் பெயரில் விவசாயிகள் குறித்த வயல் காணியை உழவு செய்து பயிர் செய்ய தயாராகி வருகின்றனர்.

இந் நிலையில் அத்துமீறி பிரவேசித்த பங்குத்தந்தை மடு தேவாலயத்தில் வேலை செய்கின்ற சிலரும் இரண்டு உழவு இயந்திரங்களில் வருகை தந்து அத்துமீறி விவசாயக் காணிகளை உழவு செய்ய முற்பட்டனர் .

இந்த நேரத்தில் குறித்த பங்கு தந்தைக்கும், விவசாயிகளுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பங்குத் தந்தை அவர்கள் குறித்த வயல் காணியை விட்டு வெளியேறி சென்றிருந்தார். (7-4-6-299)

## அவதானம்

# இடி, மின்னல் தாக்கம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இவ் வருடம் ஜனவரி முதல் நேற்று அதிகாலை 8 மணி வரையுடன் நிறைவடைந்த காலப் பகுதியில் 806.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது .

இடைக்கால பருவ மழை மாலை வேளைகளில் இன்னும் சில தினங்கள் நீடிக்கும். இடி மின்னல் தாக்கம் அதிகரிக்கும். எனவே பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (7-4-6-299)

# ஊரடங்கால் தேங்கும் கெக்கரிப்பழம்

(தர்மபுரம்)

கிளிநொச்சி அம்பாள் நகர் பகுதியில் விவசாயி ஒருவர் 5 ஏக்கரில் கெக்கரிப்பழத் தோட்டம் செய்து அதனை காகில் ஃபூட்சிட்டிகளுக்கும், வெளிமாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்து வந்தார்.

தற்பொழுது நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அறுவடைக்கு தயார் நிலையிலுள்ள கெக்கரிப்பழத்தினை ஏற்றுமதி செய்ய முடியாமையினால் மாடுகளின் பயன்பாட்டிற்கே கொண்டு செல்கின்றேன் எனத் தெரிவித்தார். (7-4-6-316)

# நாம் ஒருமித்து பயணிக்காவிடில் மீண்டும் பேரினவாதிகளின் கால்களில் மண்டியிட நேரிடும்



**(மட்டக்களப்பு)**

**நாம் ஒருமித்து பயணிக்காவிட்டால் ஆறு தசாப்த கால எம் அரசியல் கபளிகரம் செய்யப்பட்டு மீண்டும் பேரினவாதிகளின் கால்களில் மண்டியிட வைக்கும் என்பது உறுதி என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் நிற்கின்றோம். அதற்கான வாய்ப்பை ஜனாதிபதியும், இந்த அரசும், இலங்கை பாதுகாப்புத் தரப்பும் எமக்கு வழங்குகின்றார்கள். அதனை சரியாகப் பயன்படுத்துவது எமது கரங்களில் உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை குறித்தும் தமிழ்த் தேசியத் தரப்பினரின் ஒற்றுமையான செயற்பாட்டின் தேவை குறித்தும் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனிப்பட்ட அமைப்பு நலன், தனிப்பட்ட கட்சி நலன் , தனிப்பட்ட நபர் சார்ந்த நலன் எவையும் இது தொடர்பான தீர்மானம் எடுக்கும்போது கருத்தில் கொள்ளப்படாது தமிழ்த் தேசிய நலன் மட்டுமே கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஆனால் நிகழ்வுகளும் நடத்தைகளும் இதற்கு முரணாகவே பளிச்சிடுகின்றன. தமிழ்த் தேசியத்திற்காக ஒருமித்து போராடிய இயக்கங்கள் தமக்கிடையே பிளவுபட்டு மோதுண்டு பின்னர் ஒருங்கிணைந்து பின்னர் பிளவுண்ட வரலாறு எமக்குரியது.

அதன் பின்பும் கூட ஜனநாயக அரசியல் பரப்பில் தமிழ்த் தேசியத்தின் அவசியம் உணரப்பட்டு முரண்பட்ட அனைவரையும் இணக்கப்பாட்டுக்கு வரவைத்து தமிழ் ஒற்றுமை வலுவாக்கப்பட்டது. இந்த ஒற்றுமை, தாரை வார்க்கப்படக்கூடாது என்பது தமிழ்த் தேசியத்தை நேசித்த, நேசிக்கும் அனைவரினதும் அவாவும் ஆதங்கமும் ஆகும்.

நமது தனிப்பட்ட கட்சி, தனிப்பட்ட கூட்டு, தனிப்பட்ட செல்வாக்கை பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களில் தேவையேற்படின் காட்டுவோம்.

அது ஏற்படுத்தும் பாதிப்பினைவிட இன்று நாம் ஒருமித்து பயணிக்காவிடில் ஏற்படும் பாதிப்பு எமக்கும் எம் இனத்திற்கும் கடந்த ஆறு தசாப்த கால எம் அரசியல் முனைப்புக்களையும் கபளிகரம் செய்து மீண்டும் பேரினவாதிகளின் கால்களில் மண்டியிடவைக்கும் என்பது மட்டும் திண்ணம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## பேருந்து உரிமையாளர்களுக்கு சலுகைகள்

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும் பட்சத்தில் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை மேற்கொள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சில சலுகைகளை வழங்கவுள்ளனர்.

சுமார் ஒரு வருட காலமாக மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாத நிலையிலேயே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய இராஜாங்க அமைச்சர், டயர், மின்கலம் உள்ளிட்ட பல்வேறு உதிரிபாகங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் அதனால் இவ்வாறு சலுகை வழங்கப்பட உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதன்படி சுமார் 2 இலட்சம் ரூபாய் வரையிலான வவுச்சர்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் முதலாம் திகதி ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டால் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறைமைகள் குறித்து, தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இதற்கான நடவடிக்கைகளை இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் போக்குவரத்து ஆணைக்குழு என்பன மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)




**ராஜினி**




**கோபிராம்**




**நிசாந்தினி**




**தாட்ஷாயினி**




**சோபினி**




**நிருஷன்**




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# இரட்டைக்கோபுரத் தாக்குதல் நினைவஞ்சலியில் ஜனாதிபதி பங்கேற்பு



(வோஷிங்டன்)

செப்டெம்பர் 11 இரட்டை கோபுரத் தாக்குதல் இடம்பெற்று 20 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற நினைவஞ்சலியில் உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்றார்.

அமெரிக்காவின் வோஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நியூயோர்க் - மன்ஹாட்டன் நகரில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. (நி-4)

# முன்பள்ளி- ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு விசேட போக்குவரத்துச் சேவைகள் ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலைகள் மீளத்திறக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பப்பிரிவு மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்காக விசேட போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த விசேட போக்குவரத்துச் சேவை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் தனியார் வாகனங்களையும் பதிவு செய்வதற்கான வேலைத்திட்டம்



ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



கர்ணனின் தான தர்மம்

மகாபாரதத்தின் பிரபல வீரனான கர்ணன் மரணத்துக்குப் பின்னர் சொர்க்கம் சென்றான். அதுவரை அவன் செய்த தருமங்கள் நூறு மடங்காக பெருகின. ஆனால் அது அத்தனையும் வெள்ளியும், தங்கமுமாக இருந்தன. உணவாக இல்லை. இதனால் அவன் உணவுக்காக கஷ்டப்பட்டான்.

இது குறித்து அவன் எம தர்மராஜனிடம் கூறி வருத்தப்பட்டான். அதற்கு அவர் நீ பூமியில் வாழ்ந்த காலத்தில் பிறருக்கு பொன்னும், பொருளும், தானமாக வழங்கினாய். அவை அனைத்தும் இங்கு உள்ளன. ஆனால் யாருக்கும் அன்னதானம் வழங்காததால் இந்த நிலை ஏற்பட்டது எனக்கூறி இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 14 நாட்கள் அவனை பூமிக்கு அனுப்பி வைத்தார்.

அதன்படியே பூமிக்கு வந்த கர்ணன் 14 நாட்கள் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினான். பிறகு மேலுலகத்திற்கு சென்றான். அங்கு அவனுக்கு உணவு அதிகமாக இருந்தது. புரட்டாதி மாதம் மகாளய பட்சத்தில் இந்த 14 நாட்கள் அவன் அன்னதானம் செய்தான். எனவே இந்த மாதத்தில் வழங்கப்படும் தானங்கள் எல்லா பித்ருக்களுக்கும் நலம் தருகின்றன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 334 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 77 ஆயிரத்து 877 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியில் மேலும் 334 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த காலகட்டத்தில் 25 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## வழிகாட்டல்களுக்கு இணங்க விரைவில் ரயில் சேவைகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நாடு தழுவிய தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவினை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதனால் ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க வழிகாட்டல்களுக்கு அமைவாக மாகாணங்களுக்குள் ரயில்கள் இயக்கப்படும் அல்லது மாகாணங்களுக்கு இடையேயான ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர தெரிவித்தார். (நி-4)

## கைக்குண்டு தயாரிக்க உதவிய இளைஞன் கைது

(கொழும்பு)

நாரஹேன்பிட்டி வைத்தியசாலையின் கழிவறையில் இருந்து கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணையில் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் வசிக்கும் 22 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முக்கிய சந்தேக நபருக்கு வெடிகுண்டு தயாரிக்க குறித்த நபர் உதவியதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

## 250 ஒக்ஸி மீற்றர்களுடன் ஒருவர் கைது



(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் சட்டபூர்வ உரிமம் இல்லாமல் விற்பனைக்காக 250 ஒக்ஸி மீற்றர்களை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு இணங்க இலங்கை விமானப் படையினரும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவத்தில் பொல்கஹவெல்ல பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

பணம் தலை குனிந்து பணியாற்றும் அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்.
– ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பெரும் பஞ்சம் ஏற்படப் போவதன் அறிகுறியே விலையேற்றம்

அறிகுறி என்ற தமிழ் சொல்லாடல் மிகப் பெறுமதியானது.

பொதுவில் சொற்கள் வெளிப்படையாக விளங்கத்தக்கவை.

ஆனால் சில சொற்பதங்களின் உட்பொருளை விளங்கிக் கொள்வதற்கு துறை சார் அறிவும் அனுபவமும் தேவைப்படும்.

உதாரணத்துக்கு கருமேகம் தோன்றும் போது மழை வரப்போகிறது என்ற விடயம் உணரப்படும்.

ஆக மழை வருவதற்கு கரு மேகம் தோன்றுவது அறிகுறியாம்.

அதிலும் கருமேகம் எத்திசையில் ஏற்பட்டால் மழை வரும் என்பதைத் தெரிந்து கொள்கின்ற அனுபவங்களும் உண்டு.

தவிர, நோயின் அறிகுறிகளில் ஒன்று உடலின் வெப்பநிலை உயர்வடைவதாகும்.

அதாவது ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதெனில், அஃது சம்பந்தப்பட்டவரின் உடலில் ஏதோவொரு நோய் ஏற்பட்டுள்ளதென்பதை வெளிப்படுத்துகின்ற அறிகுறியாகும்.

இதனைச் சற்று விபரிப்பதாக இருந்தால், பலநோய்களுக்கான அறிகுறியாக காய்ச்சல் ஏற்படுகிறது.

குறித்த காய்ச்சல் எந்த நோய்க்குரிய அறிகுறி என்பதை இனங்கண்டு கொள்ள இரத்தப் பரிசோதனை உதவும்.

இவ்வாறாக, அறிகுறி என்பது அகவயமாக உணரப்பட வேண்டியதும் புறவயமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியதுமான பொருள்சார் சொற்பதமாகும்.

இதன்காரணமாகவே அறிகுறி என்ற தமிழ்ச் சொல் பெறுமதியானதெனக் குறித்துரைத்தோம்.

இவையொருபுறமிருக்க, இப்போது இலங்கைத் திருநாட்டில் எல்லாப் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் எகிறிய வண்ணமுள்ளது.

இதில் வர்த்தகர்கள் தாமாக விலையேற்றம் செய்கின்ற பகல் கொள்ளைக் கலாசாரமும் கணிசமாக அரங்கேறவே செய்கிறது.

எது எவ்வாறாயினும் எல்லாப் பொருட்களும் கட்டுப்பாட்டில் விலையேறிய வண்ணமுள்ளன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை.

இவ்வாறான விலையேற்றம்கூட ஓர் அறிகுறி என்றே கூறவேண்டும்.

இதை நாம் கூறும்போது விலையேற்றம் எதன் அறிகுறி என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறாயின், இந்த நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்படப் போகிறது என்பதற்கான ஓர் அறிகுறியே எகிறும் விலை எனலாம்.

ஆம், பெரும் பஞ்சம் ஏற்படப் போவதற்கு முன்னதாக பொருளாதார வீழ்ச்சியும் விலையேற்றமும் அதனூடாகப் பணவீக்கமும் ஏற்படுவது இயல்பேயாம்.

ஆகையால், பெரும் பஞ்சத்தினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் தயாராக வேண்டும்.

## மருதனார்மடம் பழ வியாபாரி மீது தாக்குதல் நடத்திய நால்வர் கைது

### இந்தியாவில் இருந்து இருவர் இயக்கியதாக கைதானவர்கள் பொலிஸில் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் சந்தியில் பழக்கடை நடத்துபவர் மீது அண்மையில் கொலை வெறித் தாக்குதல் மேற்கொண்ட வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிலவற்றை நாட்டிலிருந்து தப்பித்து இந்தியாவில் தங்கியுள்ள இருவர் இயக்குவதாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக பழக்கடை நடத்தும் மானிப்பாய் லவ் ஒழுங்கையைச் சேர்ந்த இந்திரன் நிரோஷ்குமார் (வயது-27) என்பவர் மீதே கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஊரடங்கு நடைமுறையில் இருந்த நிலையில் பொலிஸார், இராணுவத்தினர் முன்னிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேரை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்தனர். சுன்னாகம், மல்லாகம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 25-28 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களுக்கு வாள்களை செய்து கொடுத்த குற்றச்சாட்டிலும் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களிடமிருந்து 3 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் வன்முறைகளில் ஈடுபட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற இருவர் அச்சுறுத்திக் கூறியதால்தான் இந்த தாக்குதலை தாம் செய்ததாக விசாரணைகளில் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒருவர் அண்மையில் கோண்டாவில் காரைக்காலில் வீடொன்றுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,18,33)

## கிளிநொச்சி விவசாயி சந்தையில் விழுந்து மரணம்

(கிளிநொச்சி)

விவசாயி ஒருவர் சந்தையில் விழுந்து மரணமடைந்த சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

விவசாயி ஒருவர் தனது தோட்டத்து மரக்கறிகளை விற்பனைக்கு கொண்டு சென்ற சமயம் நேற்று சந்தைப் பகுதியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் வசித்துவரும் பழனியாண்டி மகேந்திரம் என்ற 66 வயதுடைய நபரே இவ்வாறு தருமபுரம் சந்தைப்பகுதியில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சிவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-3,316)

## மருத்துவக் குறிப்பு

திராட்சைப்பழத்தை பன்னீரில் ஊறவைத்து சிறிது நேரம் கழிந்து அதைப் பிசைந்து வடிகட்டி சிறிது சிறிதாக அருந்திவர இருதயம் பலப்படும்.

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** செல்வமஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, முலவை, பூநாறிச் சந்தி, சிவப்பிரகாசம் வீதி, பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (மின்சார சபை), ஆளுநர் விடுதி, யாழ். மாவட்டச் செயலகம், துளசிமஹால், யு.எஸ்.விடுதி, மருத்துவமனை வீதி , கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி, முலவைச்சந்தி, மருத்துவ பீட அரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், மருத்துவ பீடம், பிரிண்ட் மாஸ்டர் அச்சுக்கூடம், கொக்குவில், மாவடி, திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி சைலோ ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஜ.ஆர். இராணுவ முகாம்,- இரணைப்பாலை, 68 ஆவது பிரிவு- டயலொக் கோபுரம் இரணைப்பாலை தேவிபுரம், டயலொக் கோபுரம்- வள்ளிபுனம், இடைக்காட்டுச் சந்தி, இனியவாழ்வு இல்லம், இருட்டுமடு, குறாவில், உடையார்கட்டு, மூங்கிலாறு வடக்கு, சுதந்திரபுரம், தேராவில், உடையார்கட்டு, வள்ளிபுனம், வெள்ளப்பள்ளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** இலங்கை வங்கி, சுகாதாரத் திணைக்களம், கச்சேரி, தேசிய சேமிப்பு வங்கி- வவுனியா, மக்கள் வங்கி, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா வைத்தியசாலை, நீர்வழங்கல் சபை (கச்சேரி), பிரதேச செயலக அலுவலகம், மன்னார் வீதி- வவுனியா, புகையிரதநிலைய வீதியடி, வவுனியா நகரம் ஒருபகுதி, ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மதுரா நகர் கல்நாட்டின குளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- "மரங்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்"
- "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்"
- "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்"
- 'மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை'
- 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக'
- 'உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்'

இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

- மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

02



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

### கலாசாரம்

ஒரு மில்லியனுக்கு அதிகமான சனத்தொகை உள்ள ஒரே நகரம் தலைநகரமான 'காபுல்' ஆகும். ஏனைய முக்கிய நகரங்கள் சனத்தொகை ஒழுங்கில் பின்வருமாறு. கந்தகார், ஹெராட், மசார்-ஏ-ஷரீஃப், ஜலாலாபாத், கஸ்னி மற்றும் குந்துஸ் ஆகும்.


ஆப்கானியர் தமது மதம், நாடு, தம்முடைய பழைமை, தம் முன்னோர்கள், இவற்றிற்கு மேல் அவர்களது சுதந்திரம் போன்றவற்றில் பெருமை கொள்கின்றனர். இந்த நாட்டு மக்களின் தனிப்பட்ட நடத்தை காரணமாகவே வெளிநாட்டுச் சக்திகளால் அந்நாட்டைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை. ஆப்கானிஸ்தான் குழப்பமான வரலாற்றை உடைய ஒரு நாடு. அதன் வரலாறு, தற்போது அங்குள்ள கலாசாரங்கள், அல்லது பல்வேறு வடிவிலுள்ள மொழிகள் மற்றும் நினைவுச் சின்னங்களில் தான் எஞ்சியுள்ளது. ஆனால், நாட்டின் பெருமளவிலான நினைவுச் சின்னங்கள் இங்கு நடந்த போர்களினால் அழிந்து போயின. கந்தகார், ஹெராட் கஸ்னிபோன்ற நகரங்களில் கலாசாரச் சுவடுகளைக் காணலாம்.

'முகம் மது நபி' அவர்களால் அணியப்பட்ட மேலாடை ஒன்று, இன்றும் கந்தகார் நகரில் உள்ள 'கால்கா ஷரிஃபா'வில் உள்ளதாக நம்பப்படுகின்றது. இதைவிட ஹரிருட் பள்ளத்தாக்கில் உள்ள 'மின்னரட் ஒப்ஜாம்' யுனெஸ்கோவினால், உலகின் முக்கிய கலாசார இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானியர், பெரும் பகுதியினர் குதிரை ஓட்டிகள். கல்வியறிவு வீதம் மிகக்குறைவாகஇருந்தபோதும்,பாரசீக கவிதைகள் நாட்டின் கலாசாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**ஆப்கானியர் தமது மதம், நாடு, தம்முடைய பழைமை, தம் முன்னோர்கள், இவற்றிற்கு மேல் அவர்களது சுதந்திரம் போன்றவற்றில் பெருமை கொள்கின்றனர். இந்த நாட்டு மக்களின் தனிப்பட்ட நடத்தை காரணமாகவே வெளிநாட்டுச் சக்திகளால் அந்நாட்டைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை. பெண்கள் உரிமைகள் மிகவும் பாதிக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நாடுகளில் ஆப்கானிஸ்தானும் ஒன்று**

பெண்கள் உரிமைகள் மிகவும் பாதிக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நாடுகளில் ஆப்கானிஸ்தானும் ஒன்று. கல்வி உரிமை, வேலை செய்ய உரிமை, சுதந்திரமாக நடமாடும் உரிமை, சுதந்திரமாக உடை உடுத்த உரிமை, மருத்துவ உதவி பெறும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளே ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு பலகாலமாக மறுக்கப்பட்டு இருந்தன.

2001 இற்கு பின்னர் தலிபான் வீழ்ச்சிக்குப் பின்னர் அமைக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சட்டத்தின்முன் சம உரிமைகளும் பொறுப்புகளும் இருக்கு என்று வரையறை செய்தாலும், நடைமுறைகளில் மாற்றங்கள் சிறிதளவே நடைபெற்றது. இனிவரும் காலங்களில் எவ்வாறு இருக்கும் என்று தெரியாது.




### ஆப்கானிஸ்தானில் உள்ள மாகாணங்கள்

ஆப்கானிஸ்தான் 34 மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளன, அவை மேலும் பல மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. 34 மாகாணங்களின் பட்டியல் பின்வருமாறு:

(1)படாக்ஷன், (2) பாட்ஜிகள், (3) பாக்லான், (4) பால்க், (5) பமியான், (6) தய்குண்டி, (7) ஃபாரா, (8) ஃபார்யப், (9) கஜினி, (10) கோர், (11) ஹெல்மண்ட், (12) ஹெராட், (13) ஜோஸ்ஜன், (14) காபுல், (15) கந்தஹார், (16) கபிசா, (17) கோஸ்ட், (18) குனார், (19) குண்டூஸ், (20) லக்மேன், (21) லோகர், (22) நங்கர்ஹர், (23) நிம்ருஸ், (24) நூரிஸ்தான், (25) ஒருஸ்கான், (26) பக்தியா, (27)பக்திகா, (28) பஞ்ஷிர், (29) பர்வான், (30) சமங்கன், (31) சார்-இபோல், (32) தக்கார், (33) வார்டக், (34)ஜாபுல் இவை படத்தில் தரப்பட்டுள்ளன.

### ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய எமிரேட்

1747 முதல் 1973 வரை ஆப்கானிஸ்தான் ஒரு முடியாட்சி நாடாகவே இருந்தது. ஆயினும், சில படைத்துறை அதிகாரிகள் இந்நாட்டைக் கைப்பற்றி 1973 இல் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசாக அறிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசு 15 ஓகஸ்ட் 2021 இல் சரிந்ததைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் தலிபான் கட்டுப்பாட்டில் உள்ள இஸ்லாமிய எமிரேட் ஆல் ஆளப்படுகிறது.

**1747 முதல் 1973 வரை ஆப்கானிஸ்தான் ஒரு முடியாட்சி நாடாகவே இருந்தது. ஆயினும், சில படைத்துறை அதிகாரிகள் இந்நாட்டைக் கைப்பற்றி 1973 இல் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசாக அறிவித்தனர். ஆப்கானிஸ்தான் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசு 15 ஓகஸ்ட் 2021 இல் சரிந்ததைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் தலிபான் கட்டுப்பாட்டில் உள்ள இஸ்லாமிய எமிரேட் ஆல் ஆளப்படுகிறது.**

### ஆப்கானிஸ்தானின் ஆரம்ப வரலாறு

**கி.மு**

கி.மு ஆறாம் நூற்றாண்டில் இந்தப் பிரதேசத்தில் பாரசீகப் பேரரசான அக்கேமெனிடு (Achaemenid) பேரரசு பலம் வாய்ந்ததாக இருந்தது. கி.மு 300 ஆம் ஆண்டளவில் மாவீரன் அலெக்சாண்டர் இந்த நிலப்பகுதிகளைக் கைப் பற்றிக் கொண்டான். கி.மு 323 இல் இவனது மரணத்திற்குப் பின்னர் செலூச்சியப் பேரரசு, பக்திரியா (Seleucids, Bactria), அத்துடன் இந்தியாவின் மௌரியப் பேரரசு போன்ற பல பேரரசுகள் இந்தப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தன. மௌரியப் பேரரசினால் இந்நிலப் பகுதியினுள் பௌத்த மதம் பரப்பப்பட்டது.

**கி.பி**

கி.பி முதலாம் நூற்றாண்டில் தொசேரியன், குசானர்கள் (Tocharian, Kushans) போன்றோர், இந்நிலப்பகுதியைத்தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தனர். அரேபியர் இப்பிரதேசத்தை தன் கட்டுப்பாட்டில் வருவதற்கு முன்னர் பாரசீகர், சித்தியர் (Parthians, Scythians), மற்றும் மொங்கோலியரான ஃகூன் இனத்தவர் போன்ற யூராசியக் கோத்திரத்தவர்களும் (Eurasian tribes), சாசானியர்கள் (Sassanian) போன்ற பாரசீகரும் உள்ளூர் ஆட்சியாளரான இந்துசாஃகிகள் (Hindu Shahis) போன்றோரும் இந் நிலப்பகுதியை ஆட்சிசெய்தனர்.

**கி.பி7**

ஏழாம் நூற்றாண்டில் அரபு இராச்சியங்கள், ஆப்கானிஸ்தானின் பகுதிகளை கைப்பற்றத் தொடங்கின. அரபுப்பேரரசுகள் தமது அரசை மேற்கு ஆப்கானிஸ்தானுக்கு 652 இல் விரிவாக்கியதுடன் மெல்ல மெல்ல முழுப்பகுதியையும் 706 - 709 வரையான காலப்பகுதியில் ஆக்கிரமித்துக் கொண்டன.

பின்னர் இப் பகுதியை குராசான் என அழைத்ததுடன் அப்பகுதியிலிருந்த பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர்.

**மௌரியப்பேரரசினால் இந் நிலப்பகுதியினுள் பௌத்த மதம் பரப்பப்பட்டது. ஏழாம் நூற்றாண்டில் அரபு இராச்சியங்கள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்துக் கொண்டன. பின்னர் இப்பகுதியை குராசான் என அழைத்ததுடன் அப்பகுதியிலிருந்த பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர்.**

தொடரும்...

## 79 பேர்...

னால் பாதிக்கப்பட்ட மேலும் 79 பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரில் 41 ஆண்களும் 38 பெண்களும் அடங்குவதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் கோவிட் தொற்றினால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 12,609ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மிருசுவிலில்...

மதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

குறித்த பெண்ணுக்கு மூன்று பிள்ளைகள். அதில் ஒரு பிள்ளை ஏழு மாதக் குழந்தை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிருசுவில் பகுதியைச் சேர்ந்த காந்தன் ஜீவிதா (வயது - 37) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (ம-3,60)

## வடக்கில்...

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின்படி, செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 24ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடக்கில் 8 ஆயிரத்து 401 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் 38 தொற்றாளர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 30 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 28 தொற்றாளர்களும் மன்னாரில் 10 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 2 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 பேரும் வவுனியா மாவட்டத்தில் 2 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம்வரை வடக்கு மாகாணத்தில் 35 ஆயிரத்து 571 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 719 பேர் வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 371 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 394 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## அரசியல் கைதி...

பார்வையிட்டனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு சிறைச்சாலைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகளின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் அவர்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்திருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சாணக்கியன் உட்பட முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

## உயிரிழந்த...

நால்வருக்கு தடையுத்தரவு பெற்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் 5 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா தியாகதீபம் திலீபனுடைய நினைவேந்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நால்வருக்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த கட்டளையில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், 5 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் மரிய சுரேஸ் ஈஸ்வரி ஆகியோருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு தடை உத்தரவுகளை பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

குறித்த தடையுத்தரவினை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்கள், ஐந்து வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதனுடைய இல்லத்துக்கு எடுத்துச் சென்று அவருடைய மகன் பீற்றர் இளஞ்செழியனிடம் வழங்கியபோது இதில் தன்னுடைய பெயர் இல்லை எனவும் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு வழங்குவதாக இருந்தால் முல்லைத்தீவு உண்ணாப்புலவு சேமக்காலையில் கொண்டு சென்று வழங்குமாறும் கூறி பொலிஸாரை திரும்பி அனுப்பியுள்ளார். (ம-3,281)

## பெண்கள், கிராம...

இச்சம்பவம் மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வங்காலைப்பாடு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கடற்படையின் தாக்குதலில் பலத்த காயங்களுக்குள்ளான கிராம அலுவலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மன்னார் வங்காலைப்பாடு கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு கடற்தொழிலுக்கு சென்று கரை திரும்பிய மீனவர்கள் இருவரை சிவில் உடையில் வந்த இரு கடற்படையினர் தாக்கியுள்ளனர்.

இந்த நிலையில் மீன்பிடிக்கச் சென்ற தனது தந்தை நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பாத நிலையில் கடற்கரைக்குச் சென்ற கிராம சேவையாளர் அப்பகுதியில் மீனவர்கள் தாக்கப்படுவதை எதிர்த்து கேள்வி கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கோபமுற்ற இரு கடற்படையினரும் அருகில் இருந்த கடற்படை முகாமுக்கு சென்று சிறிது நேரத்தில் 10க்கு மேற்பட்ட கடற்படையினருடன் மீண்டும் அப்பகுதிக்கு வருகை தந்து அப்பகுதியில் நின்ற மீனவர்கள், பெண்கள், கிராமசேவகர் உட்பட அனைவரையும் தாக்கியதுடன் துப்பாக்கியைத் தலையில் வைத்து அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடுமையாக தாக்கப்பட்ட கிராமசேவகர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-3,285)

## சிறீதரனின்...

யில் அமைந்துள்ள அலுவலகத்தின் பிரதான நுழைவுப் பாதைகளுக்கு அண்மையாக பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டிருந்தது.

உள்நுழைபவர்கள், வெளிநுழைபவர்கள் என அனைவரும் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் ஆளடையாள அட்டைகளும் பரிசீலிக்கப்பட்டன.

தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வினை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எனினும் குறிப்பிட்ட நேரத்துக்கு பின் பொலிஸார் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ம-3)

## வட மாகாண...

இதன் பின்னர் ஏற்படும் ஆளுநர் வெற்றிடத்திற்கு வெளிவிவகார இராஜாங்க அமைச்சரின் செயலாளராகக் கடமையாற்றும் சுந்தரம் அருமைநாயகம் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுந்தரம் அருமைநாயகம், யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தின் பல மாவட்டங்களில் இதற்கு முன்னர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

எனினும் இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. (ம-3)

## வவுனியாவில்...

தாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 06 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளத்தில் ஆண் ஒருவரும் (வயது-80), கன்னாட்டி கணேசபுரத்தில் ஆண் ஒருவரும் (வயது-77), கந்தசாமி கோவில் வீதியில் பெண் ஒருவரும் (வயது-91), தேக்கவத்தை பகுதியில் பெண் ஒருவரும் (வயது-74), தோணிக்கல் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-83), சிவபுரம் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது-58) கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவர். (ம-3,250,299)

## விலைகள் அதிகரி...

அதிகரித்தால் நுகர்வோர் பெரும் சுமையை எதிர்கொள்ள நேரிடும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்குவதை விடுத்து அவர்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவது முற்றிலும் தவறானது என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபை வியாபாரிகளின் பக்கம் இருந்து செயற்படாமல் நுகர்வோர் தரப்பில் இருந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோதுமை மா, இறக்குமதி செய்யப்படும் பால்மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலையை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா ஒரு கிலோகிராமின் விலையை 200 ரூபாயினால் அதிகரிக்க நிதியமைச்சு கடந்த வாரம் இணக்கம் தெரிவித்தது. பின்னர் அத்தீர்மானம் இடை நிறுத்தப்பட்டது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாயினால் அதிகரிக்க அமைச்சரவை உபகுழு கூட்டத்தின்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டால் வெதுப்பக உற்பத்தி உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடும்.

எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து பாண் ஒரு இறாத்தலின் விலை 5 ரூபாயினாலும் பணிஸ் உள்ளிட்ட உணவு பொருட்களின் விலை 10 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் கோதுமை மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டால் அதன் சுமையை நுகர்வோர் எதிர்கொள்ள நேரிடும் என்றார். (ம-3)

## +1,146...

வரையில் கோவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 512,531 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 453,689 பேர் குணமடைந்துள்ளனர். 45,856 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## திலீபனின்...

தியாகதீபம் திலீபனின் 34ஆவது நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

திலீபனின் நினைவேந்தலுக்கு இலங்கையில் நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ள நிலையில் புலம்பெயர் நாடுகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ம-3)

## பயங்கரவாதச்...

அநுராதபுரத்தில் இராஜாங்க அமைச்சரொருவரால் அச்சுறுத்தப்பட்ட அரசியல் கைதிகளை நேற்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

முற்றுமுழுதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என கோருகின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. அதனை நீக்குவதாக வாக்குறுதி கொடுத்து நீக்காத காரணத்தால்தான் ஜி.எஸ்.பி வரிச்சலுகை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு எதிர்வரும் வாரங்களில் இங்கு வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் செவ்வாய்க்கிழமை மாலை சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்பதனையே நாம் வலியுறுத்துவோம். அதன்கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள், அதன்கீழ் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள், வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கின்றவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

இதனை அரசாங்கம் செய்தால் மாத்திரமே ஐரோப்பிய ஒன்றியத்தினால் கிடைக்கக்கூடிய சில சலுகைகளை அவர்கள் கோரக்கூடியதாக இருக்கும். இது நாட்டு மக்களுக்கும் முக்கியமான விடயம். பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொள்ளும் நிலையில் வரிச்சலுகையும் இல்லாமல்போவது மக்களின் வயிற்றில் பாரிய அடியாக இருக்கும். ஆகவே அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்கி அதன் கீழ் உள்ள அனைத்து கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என நாம் கோருகின்றோம் எனத் தெரிவித்தார். (ம-3)

DCM$_N$ - யாழ்.நகர்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

A/L 2023 ZOOM ஊடாக

கலை, வர்த்தக புதிய பிரிவு

ஆரம்பம் 02.10.2021 காலை : 9.00 மணி

அனுமதிகளை 25.09.2021 இலிருந்து (சனிக்கிழமை) அலுவலகத்தில் மேற்கொள்ளலாம். (8001)

தொடர்பு - 077 011 9434 (நிர்வாகம்)



விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கறுப்பு நிற Honda Dio விற்பனைக்கு உள்ளது. (BFS - xxxx) (8015)

077 773 0567




வேலைக்கு ஆள் தேவை

வீட்டுப் பராமரிப்புக்கு நிரந்தர வேலை ஆள் தேவை.

தொடர்பு (8014)

077 773 0567


# காரைக்கால் சிவன் கோவிலில் நாகபாம்பு



(யாழ்ப்பாணம்)

காரைக்கால் சிவன் கோவில் பகுதியில் 6 அடி நீளமான நாகபாம்பு பிடிக்கப்பட்டு, வனவிலங்கு அதிகாரிகளிடம் கையளிக் கப்பட்டுள்ளது.

காரைக்கால் சிவன் கோவில் பகுதியில் 6 அடி நீளமான நாகபாம்பை இருவர் கொண்டு வந்து விட்டுச்சென்ற நிலையில் பாம்பினை அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மீளப் பிடித்து வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளித்தனர். (ம-03,33)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 20 அடிப் பாதையுடன் 10 பரப்புக் காணி சட்டபூர்வமான சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். [யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்]

தொடர்புகொள்ளும் நேரம் :

காலை 9.00 - மாலை 6.00 மணிவரை

ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம்.

(தரகர் தேவையில்லை) (7972)

076 221 2037, 077 288 0152

076 734 1023



மணமகள் தேவை


யாழ். இந்து கௌரவ 39 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை.

தொடர்புகளுக்கு (8019)

077 905 8615

(வைபர் & வாட்ஸ் ஆப்)


# வல்லை பாலத்தடியில் பிக்கப் ரக வாகனம் விபத்து



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியால் யாழ். நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்குச் சொந்தமான பிக்கப் ரக வாகனம் வல்லைப் பாலத்தடியில் பாலத்துடன் மோதுண்டு நேற்றுச் சனிக்கிழமை விபத்துக்குள்ளாகியது.

பிக்கப் ரக வாகனத்தின் முன்சில்லு காற்றுப்போன நிலையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வல்லைப் பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் பிக்கப் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதி மற்றும் அதில் பயணித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஆகியோர் சிறு காயங்களுடன் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் குறித்த வாகனம் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது.

இதேவேளை, அச்சுவேலிப் பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-03,18,60)


மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 43 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள அழகிய மணப் பெண்ணை இலங்கையில் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலூடன் தொடர்பு கொள்ளவும். (7968)

Jeyaratnam1988@gmail.com



காணி விற்பனைக்கு

ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன் (புத்தூர் - சுன்னாகம் வீதியிலிருந்து 400 மீற்றர் தூரம்) பகுதியில் சகல வசதிகளும் பயன்தரு மரங்களும் கொண்ட 54 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குள்ளது. தரகர்கள் தவிர்க்கவும்.

தொடர்பு (8017)

077 712 0945



காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 2 பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு. (நில.பர 14 அடிப் பாதையுடன்)

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை. (தரகர் தேவையில்லை) (8016)

077 814 7389, 077 614 7333



தேவை

நாய் விற்பனை செய்யும் தரகர்கள் தேவை. விரும்பியவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு

076 714 8059


## சுவாசக் கோளாறு தென்மராட்சியில் முதியவர் மரணம்

(சாவகச்சேரி)

சுவாசக் கோளாறு காரணமாக வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட முதியவர் ஒருவர் நேற்று சனிக்கிழமை அதிகாலை வழியில் உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சி-மிருசுவில் தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த 78வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த முதியவரது சடலம் பிசிஆர் முடிவுகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-03,30)


கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் தாய்ச் சங்கத்தின் முன்னாள் பொருளாளரும் கல்லூரியின் ஆசிரியருமான திரு. வயிரவப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் அன்பு மனைவி

திருமதி

தமிழினி பிரபாகரன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்)



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (8018)

பழைய மாணவர்கள்

கொக்குவில் இந்துக் கல்லூரி



வீடு வாடகைக்கு தேவை

2 தொடக்கம் 4 அறைகளைக் கொண்ட வீடு நல்லூர், கச்சேரி, அரியாலை, கல்வியங்காடு போன்ற பகுதிகளுக்குள் தேவை. (8020)

077 593 0335

076 897 6952



தேவை

யாழ்ப்பாணத்தில் நிலப்பதிப்பு கல் (Interlock) செய்வதற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் தேவை. தங்குவதற்கு இடம், உணவு வழங்கப்படும்.

தொடர்பு (7965)

076 826 7703


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.